மன்னா

MANNA

பொழிவு 13 | மாசி 2000 | குவிப்பு 58

மன்னார் மறைவட்ட வெளியீடு / PUBLISHED BY DIOCESE OF MANNAR



" குழந்தைகள் என்னிடம் வருவதைத் தடுக்கவேண்டாம், ஏனெனில் விண்ணரசு இத்தகையோரதே" (மத்.19:14)

# நமது புனித வாழ்வைப் பற்றிச் சிந்திப்போம்

மன்னார் மறைசாட்சிகளின் புனித மண்ணிலே நாம் மீளவும் ஒருதரம் ஒன்று கூட்டப்பட்டுள்ளோம். இந்த அரிய வாய்ப் பிற்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். இந்தப் புனித பூமியிலே நாம் நிற்கின்ற வேளையிலே நம் ஒவ்வொருவருடையவும் புனித வாழ்வைப் பற்றிச் சிந்திப்போம். மனமாற்றம் பெற்று தூய ஆவிக்குரிய, தூய ஆவி காட்டும் நல்வழியை வாழுவோம். நம்முடைய கிறிஸ்தவ வாழ்வை இன்னும் பொருளுள்ள தாக்குவோம்" இவ்வாறு தைத்திங்கள் 24ம் நாள் தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் நடைபெற்ற மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 18 ஆண்டுகள் நிறைவு விழா திருப்பலியின் போது மன்னார் ஆயர் பேரருட்திரு. இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து "இயேசு சபைக்குருக்கள் நமது மறைமாவட்டத்தில் ஆரம்பகால கட்டங்களில் பணியாற்றி நமது மக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள். இந்த ஆண்டும் இந்த மண்ணிலே இன்னொரு இயேசு சபைக் குருவானவர் எம்மோடு இணைந்து திருப்பலி நிறைவேற்றுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அத்தோடு இயேசு சபைக் குருக்கள் நமது மக்களின் நல்வாழ்விலே பெரிதும் அக்கறைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அதிலும் அருட்தந்தை அமல்ராஜ் அடிகளார் புலம் பெயர்ந்த நம் சகோதரர்களின் நல்வாழ்விற்காக சிறப்பான கரிசனை காட்டி வருவதற்காக நமது நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்" என்றும் ஆயர் கூறினார்கள்.

## ஆயரின் செய்திக் குறிப்பிலிருந்து

மன்னார் ஆயர் 22.02.2000 திகதியிட்டு மறைமாவட்ட குருக்களுக்கு அனுப்பிய கடிதத்தில் பின்வருவனவற்றை அறிவித்துள்ளார்.

1. மடு மறைக்கோட்ட குருக்களின் இணைப்பாளராக (Dean) அருட்தந்தை ஸ்ரனி பிலிப்ஸ் அ.ம.தி மன்னார் ஆயர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.
2. அருட்தந்தை பாக்கிய றஞ்சித் அவர்கள் தேவன் நகர்ப் பங்கில் அருட்தந்தை ம.ஜெயபாலன் அடிகளாரோடு இருந்து பணியாற்றுவார்.
3. 2000ம் ஆண்டு உயிர்ப்புப்பெருவிழாவோடு மறைமாவட்டப் பத்திரிகையான "மன்னா" வின் ஆசிரியராக அருட்தந்தை பா.கிறிஸ்து நேசரெட்ணம் அடிகளார் பத்திரிகை ஆசிரியர் குழுவோடு இணைந்து செயற்படுவார்.
4. மறைமாவட்ட சமூகத் தொடர்பு இயக்குனராக அருட்தந்தை ந.பீ.கெனடி அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

## சாவின் நிழலிலும் ஒளியைப் பிடித்து வருகின்றீர்கள்

### இந்திய இயேசு சபைக் குரு

'இன்றைய இந்த மன்னார்த் திருச்சபை எத்தனையோ சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் முகம் கொடுத்தாலும் விசுவாசத்திலும், இறைநம்பிக்கையிலும், உறுதியாக நிற்பதைக் காணும் பொழுது நான் மகிழ்ச்சியடைகிறேன். பசி, பட்டினி, வன்முறை, போர், அடக்குமுறை என்பவற்றின் மத்தியிலும், இந்தச் சாவின் நிழலிலும் இறைவிசுவாசம் என்னும் ஒளியைப் பிடித்து இறைவனின் சாட்சிகளாக நீங்கள் வாழ்ந்து வருவது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். கண்ணீரில் மிதந்து வரும் நாம் விசுவாசத்தில் குறைவு படவில்லை. உறுதியாகவே நிற்கின்றோம்.' இவ்வாறு மன்னார் மறைசாட்சிகளின் புனித பூமியாகிய தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் தைத்திங்கள் 24ம் நாள் நடைபெற்ற மன்னார் மறைமாவட்ட 18ம் ஆண்டு நிறைவு விழாத் திருப்பலியில் மறையுரையாற்றிய இந்தியாவைச் சேர்ந்த "ஆசிய இயேசுசபை அகதிகள் பணி" பிரிவு இணைப்பாளர் அருட்திரு. அமல்ராஜ் அடிகளார் கூறினார். மேலும் அவர் தனதுரையில் "விசுவாசம் செறிந்த மண்ணின் மக்கள் மத்தியில் நிற்பதையிட்டுப் பெருமைப்படுகிறேன். விசுவாசத்திற்காக, இயேசுவுக்காக குருதி சிந்திய மறைசாட்சிகளை அடையாளப்படுத்தி, அவர்களின் வாழ்வை நமக்கு நினைவூட்டும் இந்தப்புனித பூமி நமக்கு என்றுமே ஓயாத செய்தியொன்றினைக் கொடுத்துக் கொண்டேயிருக்கின்றது. இன்றும் நாம் வேதசாட்சிகளாக மாறவேண்டும். அதற்காக இரத்தம் சிந்த வேண்டுமென்றல்ல. மாறாக மனம் மாறி கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வைக் கண்டடைந்தால் அதுவே சாட்சிகளாவதின் அடையாளமாகின்றது. நம்மைச் சூழ்ந்து நிற்கும் தீமைகளை நாம் வெல்ல வேண்டும்" எனவும் கூறினார்.

பங்குனித் திங்கள் 5ம் நாள்- திருப்பாலத்துவ சபைத் தினம்
மையப்பொருள்- புதிய சகாப்தத்தில் அன்பும், ஒளியும், வாழ்வும் ஆவோம்.

## யூபிலித் தியானம்

இந்தியா போட்டா தெய்வீக தியான இல்லத்தில் இருந்து வருகை தந்திருந்த அருட்தந்தை அகஸ்தி முண்டேகாட் சகோ.ஜோர்ஜ் தரகன் ஆகியோர் மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பங்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பணியாளர்களுக்கான சிறப்புத் தியானத்தை நடாத்தினர். மன்னார் ஆயரின் அழைப்பின் பேரில் வந்திருந்த இவர்கள் ஆயரின் ஆலோசனையுடனும், வழிகாட்டு தலுடனும் இந்தியானத்தை நடாத்தினர்.

மாசித்திங்கள் 4ம் - 7ம் திகதி வரை வவுனியா கோட்டத்திலும் 8ம் - 11ம் திகதி வரை மடுக்கோட்டத்திலும் 11ம் - 15ம் திகதிவரை மன்னார்க் கோட்டத்திலும் இத்தியானம் நடைபெற்றது. வவுனியாக் கோட்டத்தில் 500 பங்குப் பிரதிநிதிகளும், மடுக்கோட்டத்தில் 350 பங்குப் பிரதிநிதிகளும் மன்னார் கோட்டத்தில் 1250 பங்குப் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்தத் தியானம் பலருக்கும் மறக்க முடியாத ஓர் ஆன்மீக அனுபவத்தை கொடுத்துள்ளது. இத்தியானத்தின் விளைவுகள் இன்று எல்லாப் பங்குகளிலும் எதிரொலித்துக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்காக நாம் அனைவரும் இறைவனுக்கு நன்றி சொல்லுவோம்.

## மறைமாவட்டத்தில் புதிய பங்கு

வவுனியாப் பங்கின் கீழ் இருக்கின்ற சில இடங்கள் ஒன்றிணைக்கப்பட்டு பம்பை மடுவையை மையமாகக் கொண்டு "பம்பைமடுப் பங்கு" என்னும் புதிய பங்கு உருவாக்கப்படுகின்றது. இதன்கீழ் எந்தெந்த இடங்கள் உள்ளடக்கப்படவிருக்கின்றன என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை. இந்தப் புதிய பங்கின் ஆரம்பப் பணிகளை வவுனியாப் பங்குத்தந்தை அருட்தந்தை நவரெட்ணம் அடிகளாரின் வழிகாட்டுதலில் முன்னெடுத்துச் செல்லும்படி அருட்தந்தை இ.அகஸ்ரின் அடிகளார் கேட்கப்பட்டுள்ளார். இதனை மன்னார் ஆயர் 22.02.2000ம் திகதிய கடிதத்தில் கூறியுள்ளார்.



## வரவேற்கின்றோம்

சுவிஸ் தமிழ் மக்களின் ஆன்மீக இயக்குனராகப் பணியாற்றிய அருட்தந்தை சவிரி விக்ரர் அவிதப்பர் அடிகளார் தனது பணியை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார். மன்னா அன்புடன் இவரை வரவேற்று நிற்கின்றது.

யூபிலி 2000

## நித்திய இளைப்பாற்றி

அருட்தந்தை அவிக்ரர் சோசை அவர்களின் அன்புத் தாயார் திருமதி. கிறிஸ்தினாள் குரூஸ் 28.02.2000ல் காலமானார். இவருடைய குடும்பத்திற்கு மன்னா தனது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் செபிக்கின்றது.

தந்தையே, விண்ணிற்கும், மண்ணிற்கும் ஆண்டவரே போற்றி. லூக்.10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உண்மையான அர்த்தமுள்ள திருச்சபையாக வாழ முயன்றுகொண்டிருக்கும் மன்னார்த் தலத் திருச்சபை தனது வாழ்வையும், அழைப்பையும் அண்மைக் காலங்களில் ஆழமாக மீளாய்வு செய்து வருகின்றது. தன்னைப் புதுப்பித்துப் புனிதமடைந்து தன்னைச் சூழ உள்ளவர்களுக்கும் உப்பாகவும், ஒளியாகவும் திகழ ஆசித்து நிற்கின்றது. இந்த உண்மைகள் இன்று பல்வேறு ஆன்மீகச் செயற்பாடுகள் மூலமாக வெளிப்பட்டு வருவதை நாம் கண்டு, அனுபவித்து வருகின்றோம். எனவே காலத்தினூடே வெளிப்படும் இந்த இறைவனின் திருவுளத்தை சரியான முறையில் அடையாளங்கண்டு, அவற்றை சீர்தூக்கிப் பார்த்து ஒவ்வொருவரும் இணைந்து செல்ல வேண்டியது இன்று நம் எல்லோருடையவும் அழைப்பாக அமைகின்றது.

எனினும் ஆழமான ஒரு ஆன்மீகத்தைப் பெற்றுக்கொள்ள சில நிபந்தனைகள் இருந்தாலும் அதனைவிட மேலாக நிதானமும் தேவை. நிதானமிழந்தால் அழிவுகளும், துன்பங்களுமே நிலையாகும். எனவே அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்து நலமென்று கருதுவதை தேர்ந்தெடுப்பதே நல்லது. எதையும் திணிப்பு என்றோ, அல்லது இதுதான் முழுமை என்றோ எடுத்த எடுப்பிலேயே தீர்மானித்து விடுவதும், பிடிவாதமாக இருப்பதும், ஒருபக்க பார்வையோடு செல்வதும் அர்த்தமுள்ள ஆன்மீகத்துக்கு அடிகோளாது என்பதையும் நாம் ஆழமாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

காலத்தின் நடைமுறைகளினூடே நம்மை வந்தடையும் யாவற்றையும் நுணுக்கி ஆய்ந்தறிந்து அவற்றையே நமது செயற்பாட்டு வடிவங்களாக எடுத்துக் கொள்ள வேண்டும். யாவற்றையும் நுணுக்கி ஆய்ந்தறிவதற்கு நமக்கு தேவைப்படுவது "இறை ஞானமாகும்". இந்த ஞானம் எனப்படுவது நமக்கு இறைவனால் அருளப்படும் ஒரு கொடையாகும் "அவரே தமது அளவில்லாப் பரிசுத்த ஆவியைக் கொண்டு அதை உண்டாக்கி, அறிவித்து வெளிப்படுத்தினார். ஏனென்றால், தமது எல்லாப் படைப்புகளிலும், எல்லா உயிரினங்களிலும் தமது விருப்பத்திற்கு ஏற்றபடி, அதைப் பகிர்ந்திட்டார், தம்மை நேசிப்பவர்களுக்கு அதைக் கொணர்ந்தார்". (*சீரா. 1:9-10*) என்று சீராக் ஆகமம் கூறுகின்றது.

மேலும் " கடவுள் பால் உள்ள நேசமே மேன்மையுள்ள ஞானம். யார் யாருக்கு அது காணப்படுகின்றதோ அவர்கள் தாங்கள் அதைக் கண்டதாலும், அதன் மாட்சிகளை அறிந்ததாலும் அதை நேசிக்கின்றார்கள்.. ஞானத்தின் தொடக்கம் தெய்வ பயம் அது தாய் வயிற்றிலேயே பிரமாணிக்கம் உள்ளவர்களோடு உண்டாகின்றது." (*சீரா 1:14-16*) எனவே இறைவன் மீது கொள்ளும் இயல்பான பற்றுறுதியும், பாசமுமே உண்மையான ஆன்மீக மாக அமைகின்றது.

ஒரு தூணை நிறுத்தி நிலை பெறச்செய்வதற்கு பல பக்கத்துணைகளை அமைக்கின்றார்கள். பின்னர் சீமெந்து கலவை காய்ந்து இறுகிய பின்னர் பக்கத்துணைகளை அகற்றி விடுகின்றனர். இந்தப் பக்கத்துணை மரமாகவோ, இரும்பாகவோ, பிளாஸ்ரிக்காகவோ இருக்கலாம். அவை தூணை உறுதியாக்க உதவியளிக்கின்றன. அவை தூண்களல்ல. அதுபோல ஆன்மீகத்தை உறுதியாக்க பல வழிகள் இருக்கின்றன. ஆனால் அந்த வழிகளை ஆன்மீகமென்றோ அல்லது ஆன்மீகத்தை உறுதியாக்க இவை தேவையில்லை என்றோ முடிவு செய்து செயற்படுவது பொருத்தமற்றது. எனவே வீண் விவாதங்களை, தேவையற்ற பிடிவாதங்களை விடுத்து உண்மையான ஆன்மீகத்தை கண்டடைந்து வாழமுயல்வோம்.

நன்றி

அன்புடன்
ஆசிரியர்.

# சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக வளர்ச்சிப் படிக்கட்டுகள்

"ஊட்டி வளர்த்தது தாயானால் என்னை ஊக்கிக்க வைப்பது தமிழ் ஆகும்" என்ற உணர்ச்சிக் கவிஞரின் கூற்றுக்கமைய, தாய்மொழி தமிழ் மொழியினூடாக இறைபணியாளர் குருவோடு இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுக்கும்போது உள்ளத்தில் ஏற்படும் நிறைவு, மன அமைதி, இறை ஒன்றிப்பு, பரிபூரண திருப்தி இவை புலம்பெயர் எமக்கு புதிதானவை அல்ல. தமிழராகிய நாம் எமது சிறப்புக்குரிய கலை, கலாச்சார, பண்பாட்டு, விழுமியங்களை எங்கிருந்தாலும் மறந்துவிட மாட்டோம் என்பதை துல்லியமாய்க் காட்டுவதே. சுவிஸ்லாந்து நாட்டின் தமிழ்பேசும் மக்களின் ஆன்மீக வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுவதில் பல படி முன்னேற்றம் கண்டு ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்திசெய்து தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் சிறப்பாக சேவையாற்றிக் கொண்டிருக்கிறதை காணலாம். இந்த நிலை எய்த, ஆன்மீகத் தேவைகளை ஆரம்பத்திலிருந்தே நடத்த, அருட்சாதனங்களை வழங்க, திவ்விய திருச்சடங்குகளை நிறைவேற்ற எமக்கு ஒரு குரு தேவை யாக இருந்தார். அந்த குரு, பணி. ஜெயசேகரம் அடிகளாராக ஆண்டவர் எமக்கு அருளி இருந்தார். 1987ம் ஆண்டு ஆவணி மாதம் அயின்சீல்டன் திருப்பதியில் சமாதான திருயாத்திரை ஒன்று ஏற்பாடாகியிருந்தது. ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் சுவிஸ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து மதவேறுபாடின்றி பங்குபற்றி நாட்டின் சமாதானம் வேண்டி மன்றாடினார்கள். அங்கே அயின்சீல்டன் திறந்த வெளியரங்கில் ஏழு இறை பணியாளர்கள் ஒன்றுகூடி திருப்பலி ஒப்புக் கொடுத்தார்கள். அவர்களில் பணி. ஜெயசேகரம் அடிகளார் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்களில் ஒருவர். 'ஏனென்றால் சுவிஸ் தமிழ் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத்தேவை என்ன என்பதை அன்று உணர்ந்தவராக தொடர்ந்து அத்தேவைகளைப் பூர்த்தி செய்ய திருவுளமாயிருந்தார். திருவருகைக் காலத்திலும், தபசுகாலத்திலும் அடிகளார் எமக்கு ஆன்மிக சேவையுரிய, மந்தைகளை மேய்க்கும் ஆயன்போல் ஓடோடி வருவார். 1987ஆம் ஆண்டு யாழ்ப்பாண மேற்றாணியார் மேதகு அதிவணக்கத்துக்குரிய டாக்டர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் கண் சிகிச்சையின் பொருட்டு சுவிஸ் நாட்டிற்கு வருகை தந்தார். அப்போது சூரிச் மாநிலத்தில் நல்லாயன் ஆலயத்தில் திருப்பலியும் ஒன்றுகூடலும் ஒருங்கே இடம்பெற்றன. இலங்கை இந்திய ஒப்பந்தம் நடைபெற்ற காலம் அது. மதவேறுபாடின்றி தமிழ்மக்கள் ஒருங்குசேர கூடிய நல் இனிய மாலைப் பொழுதாய் அமைந்திருந்தது.

1992 பணி.கிருபானந்தம் சுவிஸில் தமது ஆன்மீகப் பணிகளைச் செய்துள்ளார். இவர் பெல்ஜியத்திற்கு மேற்படிப்பிற்காக வந்திருந்தார். விடுமுறை நாட்களில் தமது பணியை இங்கு மேற்கொண்டிருந்தார். 1993ஆம் ஆண்டு பணி.ஜெயசேகரம் தலைமையில் அயின்சீல்டன் திருப்பதியில் சமாதான யாத்திரை இடம்பெற்றது. பணி.ஜெயக்குமார் அடிகளார் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தார். இவ்வாறாக மாறி திருப்பாடுகளின் திருயாத்திரையும் இடம்பெறும். 1994 மரியஸ்ரைன் திருப்பதியிலும் சமாதானத் திருயாத்திரை நடைபெற்றது. அயின்சீல்டன் மரியஸ்ரைன் திருப்பதிகள் ஐரோப்பாவின் தலைசிறந்த கத்தோலிக்க யாத்திரைத் திருத்தலங்களாக விளங்குகின்றன. மத வேறுபாடுகளின்றி பல மக்களும் ஒன்றுகூடும் தேவஸ்தானங்களாக, புதுமை புரியும் மரியன்னையின் புண்ணியத் தலங்களாக சுவிஸில் துலங்குகின்றன.

சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் கால்கோள், ஆரம்பகர்த்தா, அஸ்திபாரம் பணி.எமிலியானுாஸ்பிள்ளை அடிகளார் அவர்களே. மேற்படிப்பிற்காக ஐரோப்பா வந்த இவர் 1994ஆம் ஆண்டு சுவிஸ்லாந்து தேசத்தில் ஆன்மீகப்பணி புரியும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது சுவிஸ் தமிழ் மக்களின் தேவையை உணர்ந்தார். சுவிஸ்நாட்டிற்கே ஒரு ஆன்மீகப்பணியாளர், இயக்குனர் அவசியம் என அறிந்து அதற்கேற்ப ஆவன செய்ய முனைந்தார். அடிகளாரின் முயற்சி கைமேல் பலன்கொடுத்தது.

1996ம் ஆண்டு மன்னார் ஆயர் வணக்கத்திற்குரிய யோசேப் இராயப்பு ஆண்டகை சுவிஸ் நாட்டிற்கு வருகை தந்திருந்தார். 1996 ஆம் ஆண்டு சுவிஸ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்திற்கு இயக்குனர் ஒருவர் நியமனம் பெற்று இலங்கையிலிருந்து வருகை தந்தார். சுவிஸ் ஆயர் மன்றத்தினூடாக இலங்கை ஆயர்கள் அனுமதியுடன் மன்னார் மறைவட்டம் பொறுப்பேற்று பணி.சவரி விக்ரர் அவிதப்பர் அடிகளார் அவர்களை சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் பெற்றது பெரும் வரப்பிரசாதமாகும்.

சுவிஸ் வெளிநாட்டு கத்தோலிக்க மக்களுக்கு பொறுப்பாக இருக்கும் Dr. Urs Hopel அவர்களின் ஆதரவுக்கரம் எங்கள் பக்கம் நீண்டது. 1996 ஆம் ஆண்டு தைமாதம் ஓல்டன் மரியாள் ஆலயத்தில் பணி.சவரி விக்ரர் அவிதப்பர் அடிகளாருக்கு வரவேற்பு வைபவமும், பணி. ஜெயசேகரம் அடிகளாருக்கு பாராட்டு விழாவாக, குருத்துவ வாழ்வின் 25 ஆம் வருட வெள்ளி விழா நிகழ்வும் Dr. Urs Hopel அவர்களின் முன்னிலையில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. சுவிஸின் பல பாகங்களில் இருந்து மக்கள் வருகை தந்து திருப்பலியில் பங்குபற்றி நிகழ்வுகளை சிறப்பித்திருந்தார்கள். அதன் பின் சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் வளர்ச்சிப்படிகள் பரந்து விரிந்தன. மத்திய குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மாநிலங்களில் இருந்து இரண்டு அங்கத்தவர்கள் என ஓல்டன் மாநிலத்தில் இயக்குனர் தலைமையில் ஒன்றுகூடி பல செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. மேற்புல ஒன்றிய மேய்ப்புப் பணியோடு இணைந்து பணி.சவரி விக்ரர் அவிதப்பர் அடிகளார் ஆரோக்கியமான செயற்பாடுகளை மேற்கொண்டார். சுவிஸ் மாநிலங்களில் பணியக கிளைகள் ஆரம்பிக்கப்பட்டு பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மறைக்கல்வி புகட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டது. திருவிழாக்களும் நடந்தேற ஏதுவானது. பேர்ன் மாநிலத்தில் புனித சூசைமாமுனிவர் திருநாளும், பாசல் மாநிலத்தில் புனித அந்தோனியார் திருநாளும், திருப்பணிகளும் இடம்பெறுகின்றன. 1998 யாழ் திருமறைக்கலாமன்றம் பணி. சவரி தலைமையில் பல நாடகங்களை சுவிஸில் நடத்தினர்.. பிரான்ஸில் இருக்கும் திருமறைக்கலாமன்றம் யாழ் கிளையும் "களங்கம்" நாடகத்தை நிகழ்த்தினார்கள். பல கருத்தரங்குகளும், ஒளி விழாக்களும், ஒன்றுகூடல்களும், சமாதான யாத்திரைகளும், திருவிழாக்களும், திருஅருட்சாதன சடங்குகளும் சுவிஸ் நாட்டில் இடம் பெறும்போது இவற்றில் கிடைக்கப்பெறும் காணிக்கைப் பணம், நன்கொடைகள் சுவிஸ் ஆயர்கள் மூலம் இலங்கையில் அல்லலுறும் மக்களுக்காக இலங்கை ஆயர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது இங்கே சுட்டிக்காட்டக் கூடியது. மற்றும் ஒளி விழாக்களில் இந்து மக்களின் பங்களிப்பும் கணிசமாக இருக்கிறது. மேலும் நாட்டின் சமாதான யாத்திரை வேண்டிய வழிபாடுகளின் போதும், பிற மத மக்களும் பெருமளவில் பங்குபற்றுவது காலக் கிரமத்தில் அதிகரித்துச் செல்கிறது. சென்ற ஆண்டு 1999 மரியஸ்ரைன் தேவாலயத்தில் நிறைத்த தமிழ் பக்தகோடிகளைக் காணக்கூடியதாக இருந்தது. ஆன்மீக பணியகத்தின் வளர்ச்சிப்படியின் முன்னேற்றமே என்று கூற வேண்டும். சுவிஸில் மாத்திரமன்றி ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தமிழ் மக்கள் வருகை தருவது அதிகரித்துள்ளது.

1999 ஆம் ஆண்டு ஆவணி மாதம் பணி. சந்தியா சோசை ஜொய்சி பெப்சி அடிகளார் அவர்கள் சுவிஸ்லாந்து தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குனர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பணி. சவரி விக்ரர் அவிதப்பர் அடிகளார் மேற்படிப்பை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ளார். புதிய இயக்குனர் அவர்களின் நிலைப்பாடு மனத்துணிவுடன் எடுத்த காரியத்தை நடத்தி முடிக்கும் ஆற்றலாக தோடர்கிறது. இறைவனுக்கு நன்றி கூறிக்கொள்கின்றோம். நாளும் பொழுதும் நம்மவரைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் களைந்து, இயன்ற உதவிகளைப் புரிந்து, தம்மாலான வகையில் புலம்பெயர் தமிழ் மக்களின் ஆன்மிகத் தேவைகளை பூர்த்தி செய்து வருவதுடன் மாத்திரம் நில்லாது எமது நாட்டு மக்களின் இடர்ப்பாடுகளைக் களைய, துன்ப துயரங்களை நீக்க பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை, முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் என்பது வெள்ளிடைமலை. அடிகளாரின் சேவை சிறக்க எல்லாம் வல்ல இறைவன் நல்ல ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் கொடுக்க வேண்டுமென்று மன்றாடுகின்றோம். சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் மேன்மையுறு செயல் பல புரிந்து முத்திரை பதிக்க இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நன்றி
அன்புடன்
பொன் பற்றிக் குணம். – (சூரிச)

## அருட்தந்தை மேரி பஸ்ரியன் நினைவாக
# மறக்க முடியவில்லையே ஐயனே

விதை நிலத்தில் மடிந்தால் ஒழிய பயன் ஏது
மரத்தின் கனி உதிர்ந்தால் தான் உணவாகும்
செடியில் மலர் பறித்தால் தான் பூவைக்கோ பயன்
சிற்பியின் முத்தை பிரித்தால் தான் பெறுமதி
ஓடும் நீரை அணைத்தால் தான் அறுவடை
கனிகளை பிழிந்தால் தான் இரசம்
மண்ணை புண்படுத்தினால்தான் புதையல்
பூ சருகானால் தான் பழம்
அதனால்தான் என்னவோ நீரும் எம்மை விட்டுப்
பிரிந்து எமக்கு புதையல் ஆனீரோ ஐயனே

எம் வங்காலை மக்கள் வளம் பெற்று வாழ நீர் பட்டபாடு
அதன் பயன்தான் வங்காலைப்பாடு
குளிக்க நீர் இன்றி குமிறிய போது
கொப்பளித்துப் பாயும் குழாய் கிணறுகள் அமைத்ததை
மறக்க முடியவில்லை ஐயனே
குடிசையில் தங்கியிருந்த மக்களுக்கு
கோபுரம் போன்ற வீடுகள் அமைத்தும்
அகதிகளான எம் உடன்பிறப்புகளை
பாசமுடன் அணைத்து பஸ்ரீபுரி அமைத்ததையும்
மறக்க முடியவில்லை ஐயனே
இளைஞர்களுக்கு விழிப்புணர்ச்சியும்,
ஏழைகளுக்கு தொழில் முயற்சியும்
மாணவர்களுக்கு மறைக்கல்வியும் அளித்ததையும்
எம்மால் மறக்க முடியவில்லை ஐயனே
பகல் வேளையிலும் பாதவலியின்றி
படபடவென்று பறந்து சேவை புரிந்த
பஸ்ரியான் அடிகளாரை மறக்க முடியவில்லையே.

ஐயனே உமது புன்னகை தவழும்
இன்முகத்தை முழு நிலவென புகழ
யாம் விரும்பவில்லை
ஏனென்றால் அந்த நிலவிலும் கறையுண்டு
எனவே நிலவை விட நீர் மேலானீர்
கள்ளமற்ற உம் வெள்ளை உள்ளத்தை
பசும் பாலென புகழ யாம் விரும்பவில்லை
ஏனெனில் அந்த பாலிலும் பக்ரீரியாக்கள் உண்டு
எனவே பாலைவிட நீர் மேலானீர்
இனிமையான உமது பேச்சை
தேனுக்கு ஒப்பிட விரும்பவில்லை
ஏனென்றால் தேனிலும் மெழுகும் கழிவும் உண்டு.
எனவே தேனைவிட மேலானீர்
சோலையுள் புகுந்து தவழும் தென்றலைப் போல்
எம்மக்கள் இதயத்துள் புகுந்த உம்மை
இளந்தென்றல் என கூற விரும்பவில்லை
ஏனென்றால் தென்றலிலும் தூசி உண்டு
எனவே தென்றலை விட நீர் மேலானீர்
உமது சேவையை காலைக் கதிரோனின்
கதிர் ஒளி என கூற யாம் விரும்பவில்லை
ஏனென்றால் அக்கதிரிலும் நஞ்சு நிறைந்த ஊதா நிறம் உண்டு
எனவே கதிரோனை விட மேலானீர்
எனவே ஐயனே

செடியின் மலர் செடிக்குச் சொந்தமல்ல
மரத்தின் கனிகள் மரத்திற்குச் சொந்தமல்ல
நிலாவின் ஒளி நிலாவுக்குச் சொந்தமல்ல
சிப்பியின் முத்து சிப்பிக்குச் சொந்தமல்ல
சோலையின் குளிர்ச்சி சோலைக்கு சொந்தமல்ல
சமுத்திரத்தின் சொத்து சமுத்திரத்திற்கு சொந்தமல்ல
மேகத்தின் நீர் மேகத்திற்குச் சொந்தமல்ல
விதையின் உள்ளீடு விதைக்குச் சொந்தமல்ல
பசுவின் பால் பசுவிற்குச் சொந்தமல்ல
நாம் தேடும் சொத்துக்கள் நமக்குச் சொந்தமல்ல
எமது உடல் எமக்குச் சொந்தமல்ல ஆம்
இவை எல்லாம் அவனுக்குச் சொந்தமானதே
ஐயனே உமது ஆன்மா என்றும் இன்புற்று இருக்க
எல்லாம் வல்லவனை வேண்டுகின்றோம்.

றெஜின் – வங்காலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியான அனுபவம்

என்னைத் தூய்மைப்படுத்திய ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றேன். நான் மன்னாரில் நடந்த தியானத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு கிடைத்தும் நான் போக விரும்பமில்லாமல் அலட்சியம் செய்தேன். ஏன் என்றால் என்னுடைய கஸ்ரங்கள் துன்பங்கள் என்னை முள்செடிபோல் நெரித்தன. தியானம் தொடங்கிய அன்று மாலை வீட்டிலே வேலை செய்துகொண்டிருந்தேன். அந்த வேளையில் என்னை வீடுதேடி மூன்று வானதூதர்கள் வந்தார்கள். என்னைத் தியானத்தில் கலந்துகொள்ளும்படி கேட்டார்கள். அந்த நிமிடமே கடவுள் என்னை மீண்டும் மீண்டும் அழைக்கின்றார் என்று உணர்ந்து அடுத்த நாள் காலையில் போவதாக தீர்மானித்தேன்.

நான் இங்கு இவற்றையெல்லாம் என்னுடைய பெருமைக்காக அல்ல கடவுளுடைய பெருமைக்காகவே கூறுகின்றேன். வானதூதர்கள் என்னிடம் இருந்து விடைபெற்று துறவிகள் மடம் சென்று விட்டனர். அடுத்த நாள் காலையில் சகல ஆயத்தங்களுடனும் மன்னாருக்கு சென்று விட்டேன். அங்குபோய் குருவானவரிடம் அனுமதிப் பெற்று கடைசி இருக்கையில் அமர்ந்துகொண்டேன். ஏதோ புதுமைகள் நடந்துகொண்டிருந்தன. எனக்கு ஒவ்வாத செயல்கள் அங்கு நடந்தன. ஆண்டவரை கூச்சலிட்டு செபித்துக்கொண்டிருந்தார்கள். நேரம் கடந்து போகப் போக என்னுடைய மனம் சிறிது சிறிதாக மாற்றம் பெற்றது. நான் அந்த கூட்டத்தில் ஒருவனானேன்.

என்னை அறியாமலே ஒரு சக்தி தூண்டிற்று. கடவுளுடைய வல்லமைகள் அங்கு நடந்து கொண்டிருந்ததை உணர்கிறேன்.

பெற்றோரைப் பற்றிய கருத்துக்கள் விவிலிய வார்த்தையிலிருந்து பகிரப்பட்டது. பெற்றோர்களை மதிப்பதற்குபதிலாக மிதிக்கின்றோம் என்று எழுந்த உரையில் இறுதியில் உங்கள் பெற்றோர்கள் இங்கு இருந்தால் அவர்களை நீங்கள் மிதித்ததற்காக மன்னிப்புக் கேட்கும்படி கேட்கப்பட்டது. பக்கத்தில் நிற்பவர்களை கூட உங்கள் பெற்றோராக நினைத்து மன்னிப்புக் கேட்கும்படி கேட்கப்பட்டது. எல்லோரும் கால்களை, கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதார்கள்.

எனக்குபக்கத்திலிருந்த ஒரு கால் ஊனமுற்ற மனிதர் தன் மகன் முன்னே இருந்து ஓடி வருவதைக் கண்டார். அவர் காலில் மகன் குப்புற விழுந்து ஓலமிட்டு அழுவதையும் அவனுடைய உடல் நடுங்கியதையும் நான் பார்த்து அழுதேன். அங்கு கண்ணீர் சொரியாத மனிதர்களே இல்லை. இயேசு சொன்னார் நூற்றுவத் தலைவனைக் குறித்து மக்கள் கூட்டத்தை திரும்பிப் பார்த்து "இஸ்ராயேலரிடம் இத்துணை விசுவாசத்தை நான் கண்டதில்லை" என்று. இத்தகைய ஒரு மனமாற்றத்தை நானும் ஒருபோதும் கண்டதில்லை மனம் திரும்பிய மகனையும் மன்னிக்கும் தந்தையையும் அந்தக் காட்சியில் கண்டேன். கடவுளுக்காக நான் சாட்சியம் கூறுகின்றேன்.

ஐந்து வருடகாலமாக நான் வெளிநாட்டில் வேலை செய்தேன். உலகின் பல நாடுகளுக்கும் நான் சென்றிருக்கிறேன். ஆனால் என்னுடைய ஆன்மாவை ஒருபோதும் இழந்ததே இல்லை. கடவுள் என்னைக் காத்திருக்கிறார். என்னோடு கூட இருந்த நண்பர்கள் நான் உதவிசெய்து விமானம் ரிக்கற்றுக்கு காசு கொடுத்து எனக்கு தாங்கள் அங்கு சென்று உதவுவதாக கூறி அமெரிக்காவிலும், கனடாவிலும், ஒஸ்ரேலியாவிலும், இருக்கின்றார்கள். அங்கு அவர்கள் போய் ஒருசில கடிதங்கள் மட்டும் எனக்கு அனுப்பினார்கள். இப்போ என்னை மறந்துவிட்டார்கள். ஆனால் இயேசு என்னை மறக்கவில்லை. மனித பலவீனத்தில் நான் ஏன் இப்படி இருக்கின்றேன் என்று என்னையே வருத்திக் கொள்வேன். நான் எனக்கென்று எதையும் பற்றி வைத்திருக்கவில்லை. உண்மையில் சொன்னால் ஐந்து வருடங்கள் வெளிநாட்டில் உழைத்து மன்னாருக்கு தியானத்துக்கு போக என்னிடம் 100 ருபாய் காசு இல்லாமல் வருந்தினேன். பஸ் காசோடு மட்டும்தான் அங்கு சென்றேன். நான் கடவுளுக்கு நன்றி கூறுகிறேன்.

என்னோடு உயர்தரம் படித்தவர்கள் பங்குமனைகளில் குருக்களாக, பாடசாலைகளில் அதிபர்களாக, அருட்சகோதரிகளாக பல பதவிகளில் இருக்கின்றார்கள். கடவுள் ஏன் எனக்கு இன்னும் ஒரு நிலையை தரவில்லை என்று வருந்துவேன். தியானத்துக்கு சென்றுதான் உண்மையை உணர்ந்தேன். அங்கும் என் வகுப்பு மாணவ குருவிடம் தான் பாவசங்கீர்த்தனம் பெற்றேன். அவர்களிலும் மேலாக கடவுள் என்னை அன்பு செய்கின்றார். அதனால்தான் எனது குடும்பத்தில் மகிழ்ச்சியாக வாழ்கின்றேன்.

**எஸ். நீக்கிலஸ் – முருங்கன்**

# ஜூபிலி ஆண்டின் பணித்திட்டம்

எமது ஜூபிலி ஆண்டின் அருள்வாழ்வு பயணத்தில் காலடி வைக்கும் முகமாக எமது பங்கின் முதல் நிகழ்வாக 22.01.2000 சனிக்கிழமை அன்று பிற்பகல் 3.30 மணியளவில் வண. பங்குத்தந்தை அருட்திரு தேவசகா யம்பிள்ளை அடிகளாரின் வழிகாட்டுதலில் மேய்ப்புப் பணி மாநாடு ஒன்றுகூடல் நடாத்தப்பட்டது இதற்கு எமது பங்கின் ஆலய மேய்ப்புப் பணிச்சபை பெரியோர்களும் மற்றும் அனைத்து பக்திச் சபை அங்கத்தவர்களும் உற்சாகமாக கலந்து கொண்டனர். மாநாட்டில் நற்கருணைப் பக்தி, அன்பிய வாழ்வு, ஒப்புரவு வாழ்வு, சிறுவர் உருவாக்கம் என்பன தொடர்பாக பல்வேறு திட்டங்களும் அத்துடன் மக்களின் ஆன்மீக பணியினை மேலும் வளம் பெறச் செய்வதற்கு வேறு பல திட்டங்களும் முன்வைக்கப்பட்டன. இத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்வதற்கு அனைத்து பக்திச் சபைகளும் தம்மால் இயன்ற முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம் என உறுதியான தீர்மானம் எடுத்தனர்.

**அதிரியான் ஜோர்ஜ் குருஸ் – வங்காலை**

# மன்னார் மறைசாட்சிகள் – வரலாற்று ஆய்வு

### முன்னுரை

மன்னார் மறைசாட்சிகள் பற்றி நீண்டகாலமாக நிலவி வந்த முரண்பாடுகள், சிக்கல்கள், வரலாற்று ரீதியாக விடப்பட்ட சில தவறுகளுக்கு முடிவைக் கொண்டு வர ஆசித்து இவ் ஆய்வை மேற்கொள்ள முனைந்தேன். எப்படியான சிக்கல்கள், முரண்பாடுகள் இருந்தாலும், மன்னார் மறைசாட்சிகளின் தியாக சாட்சியம் ஓர் உண்மை வரலாற்று நிகழ்வு என்பதை நாம் தெளிவுடன் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

### புனித சவேரியாருக்கு அழைப்பு

மன்னார் மக்கள், தமக்கு வந்து போதித்து, திருமுழுக்கு வழங்கும்படி புனித சவேரியாரை அழைத்தனர் என்ற கருத்தை பல வரலாற்று ஆசிரியர்களும், ஏற்றுக்கொள்கின்றனர். இதிலே புனித பிரான்சிஸ் சவேரியார், தானே மன்னார் தீவுக்கு வந்து போதித்தார் என றேபேட்கூக் என்பவரும், சைமன் காசிச் செட்டி என்பவரும் தமது நூல்களில் எழுதியுள்ளனர். ஆனால் மன்னார் பங்கின் முதற் பங்குத்தந்தையான அன்றிக் அன்றிக்கஸ் அடிகளார், பிரான்சீஸ் சவேரியார் என தனது பெயர் கொண்ட ஒரு தமிழ் திருத்தொண்டரையே புனித பிரான்சிஸ் சவேரியார் மன்னார் தீவுக்கு அனுப்பினார் என்று குறிப்பிட்டுள்ளார். வரலாற்று ஆசிரியர்களான குவாறஸ், ஸ்கூமேர், சுவாமி ஞானப்பிரகாசர், செலஸ்கி, மெஸ். வேலுப்பிள்ளை, என்.ஜி.பெரேரா, முதலியார் இராசநாயகம், அன்ரனைனஸ் அடிகளார் போன்றோர் இதை ஏற்றுக் கொள்கின்றனர்.

ஆகவே பிரான்சிஸ் சவேரியார் என்ற திருத்தொண்டரே மன்னார்த்தீவுக்கு, புனித பிரான்சிஸ் சவேரியாரால் அனுப்பப்பட்டு சத்திய மறையை போதித்து மன்னார் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்துள்ளார் என்பது வரலாற்று உண்மையாக இருக்கின்றது. ஆகவே புனித சவேரியார் மன்னார் மறைசாட்சிகள் மரித்த பிற்பாடே மன்னார் தீவுக்கு வந்துள்ளார் என கொள்ளவேண்டியுள்ளது.

### சங்கிலி அரசனின் காலம்

மன்னார் மக்கள் கத்தோலிக்க சமயம் மாறிய போது, மன்னார்த்தீவானது யாழ்ப்பாண அரசன் 7ம் செகராசசேகரனின் (சங்கிலியன்) ஆட்சியின் கீழ் அமைந்திருந்தது என்றும், சங்கிலியனால் இவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதையும் அனைத்து வரலாற்று ஆசிரியர்களும் தமது நூலில் குறிப்பிட்டு ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே சங்கிலி காலத்திலேயே இவ்வரலாற்று நிகழ்வு நடந்துள்ளது என்பது கண்கூடு.

### மறைசாட்சிகள் தொகை

சில ஆசிரியர்கள், மறைசாட்சிகள் 600 பேர் மட்டுமே மரித்தனர் என்று கூற, சில ஆசிரியர்கள் 700 பேர் என்று கணித்துள்ளனர். ஆனால் வரலாற்று ரீதியாக ஆராய்ந்து பார்க்கும்போது ஆயிரத்துக்கும் கூடுதலான மக்கள் ஞானஸ்நானம் பெற்றுள்ளதை அறியக் கூடியதாக இருக்கின்றது. சங்கிலி அரசன் 5000த்திற்கும் அதிகமான படைவீரர்களுடன் வருவதைக் கேள்விப்பட்ட ஞானஸ்நானம் பெற்ற பலர் மாதோட்டத்திற்கு தப்பியோடினார்கள் என்பதற்கான வரலாறுகளைக் காணக் கூடியதாக உள்ளது. இவ்வடிப்படையில் ஆராய்ந்து பார்க்கும்போது ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் கொல்லப்பட்டனர் என கொள்ளமுடியாது. ஆனால் வரலாற்று சான்றுகளை முன்வைத்து ஆராய்ந்து பார்க்கும்போது 600க்கும் – 700க்கும் இடைபட்டவர்கள் உண்மையாகவே மறைக்கு சாட்சியம் பகர்ந்து, இயேசுவையே தங்களது தெய்வமாக ஏற்று வேதசாட்சிகளாக மரித்துள்ளனர் என ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

### அரசியல் காரணத்தைவிட மதமாற்றமே முதன்மை பெறுகின்றது.

புதிதாக கத்தோலிக்க மதம் மாறிய மன்னார் மக்களுடன் சேர்ந்து இளஞ்சிங்க என்று சொல்லப்படுகின்ற சங்கிலியனுடைய அரச பிரதிநிதியையும் சேர்த்து கொலை செய்தமைக்கு மதம் பற்றிய காரணத்தைவிட அரசியல் பற்றிய காரணமே அடிப்படைக் காரணமாக் கொள்ளலாம் என்று பேராசிரியர் சிற்றம்பலம் கூறுகின்றார். மன்னார் மக்கள் மதம் மாறுவதற்கு முன்னரே போர்த்துக்கேயர் உள்நாடுகளில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கூட வியாபாரத்திலும் மதம் பற்றிய போதனைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். எனவே தனியே அரசியல் காரணம் தான் அடிப்படை என்று கொள்ள முடியாது. மத மாற்றமும் வேதசாட்சிகள் மரிப்பதற்கு அடிப்படைக் காரணமாய் உள்ளது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அக்கால சைவ சூழ்நிலையில் அரசியலையும் சமயத்தையும் பிரித்துக் பார்க்க முடியாது. அந்த வகையில் சமயம் பற்றிய காரணம் முதன்மை பெறுகின்றது எனலாம்.

### மறைசாட்சி மரணம் நடைபெற்ற காலம்

மறைசாட்சி மரணம் நடைபெற்ற காலம் 1544ம் ஆண்டு என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. இதை மேலைத்தேய, இந்திய, சிங்கள, தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் எத்தனையாம் திகதி நடைபெற்றது என்பது பற்றி பலரும் பலவிதமாக கூறியுள்ளர். ஒன்றுமட்டும் உண்மை. அது என்னவென்றால், புனித பிரான்சிஸ் சவேரியார் 1544ம் ஆண்டு ஆவணி மாதம் 21ம் திகதி மான்சில்காஸ் எனும் குருவுக்கு, மன்னார்த்தீவுக்கு போகும்படி கடிதம் அனுப்பியிருக்கின்றார். இது கைகூடாமல் போகவே பிரான்சிஸ் சவேரியார் என்ற பெயர் கொண்ட திருத்தொண்டரை அனுப்பியுள்ளார். பின்னர் புனித பிரான்சிஸ் சவேரியார் மான்சில்காசுக்கு இன்னும் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அக்கடிதம் 1544ம் ஆண்டு மார்கழி மாதம் 18ம் திகதி எழுதிய கடிதமாகும். அக்கடிதத்திலே மன்னார் கிறிஸ்தவர்களைக் கொன்ற யாழ்ப்பாண அரசனுக்கு தண்டனை வழங்குவது பற்றி குறிப்பிட்டுள்ளார். இக்கடிதங்கள் இரண்டையும் ஆதாரமாக கொண்டு ஆராயும்போது இந்நிகழ்வானது 1544ம் ஆண்டு ஆவணி மாதம் 21ம் திகதிக்கும் அதே ஆண்டு மார்கழிமாதம் 18ம் திகதிக்கும் இடையில் நடைபெற்றுள்ளது எனக் கணிக்க வாய்ப்பளிக்கின்றது.

### மறைசாட்சிகள் மரித்த இடம்

மறைசாட்சிகள் மரித்த இடம் பற்றி நீண்டகாலமாக வரலாற்று அறிஞர்களிடையே மயக்கநிலையே இருந்துவருகின்றது. சுவாமி ஞானப்பிரகாசர், அன்றுலோப்பஸ் அடிகளார், சி.டி.வேலுப்பிள்ளை, ஜோன் ஹென்றி மாட்டின், சைமன் காசிச் செட்டி போன்றோர் தோட்டவெளியே மறைசாட்சிகள் மரித்த இடம் என்கின்றனர். ஆனால் போத்துக்கேய, இந்திய, சிங்கள வரலாற்று ஆசிரியர்களும், அன்ரனைனஸ் அடிகளாரும் பட்டிம் அதாவது பட்டித்தோட்டம் எனக் கருதுகின்றனர். புனித பிரான்சிஸ் சவேரியார் தனது கடிதங்களில் கரையா பட்டாவோ என்று மட்டும்தான் குறிப்பிட்டுள்ளார். ஆனால் 1561–1564 வரை மன்னார்த்தீவின் முதற் பங்குத் தந்தையாக கடமையாற்றிய அன்றிக் அன்றிக்கஸ் அடிகளாரின் கடிதமே மூலநூலக அமைகின்றது. இவர் போர்த்துக்கேயராக இருந்தாலும் தமிழிலே தேர்ச்சி பெற்றவர். பல நூல்கள் தமிழிலே எழுதியுள்ளார். இவரது கடிதங்களின்படி மறைசாட்சிகள் மரித்த இடம் பட்டித்தோட்டமே என தெளிவு ஏற்படுகின்றது. இதை பல வரலாற்று ஆசிரியர்களும் ஏற்றுள்ளனர்.

### மறைசாட்சியினர் எந்த சமூகத்தைச் சார்ந்தவர்கள்?

மறைசாட்சிகள் எந்த சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்பது எமது விசுவாச வாழ்விற்கு தேவையானது அல்ல. யாராக இருந்தாலும் அவர்கள் கிறிஸ்தவ மறைக்காக தம்மை அர்ப்பணித்தார்கள் என்ற எண்ணம்தான் மேலோங்கியிருக்க வேண்டும். வரலாற்று ரீதியாக ஆராய்கின்றபோது சில தவிர்க்கமுடியாத உண்மைகளை கூறியே ஆகவேண்டும்.

மறைசாட்சிகளாக மரித்தவர்கள் கடைய சமூகத்தவர்கள் என்று, அன்றுலோப்பஸ் அடிகளார், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் இராஜநாயகம், ஜோன் கென்றி மாட்டின், றெபேட் கூக், சைமன் காசிச் செட்டி, பேணியோலா போன்றவர்கள் கூறியுள்ளனர். ஆனால் மூல நூற்களான (மன்னார் மறைசாட்சிகள் பற்றி) புனித பிரான்சீஸ் சவேரியாரினதும், அன்றிக் அன்றிக்கஸ் அடிகளாரினதும் கடிதங்களை ஆதாரமாகக் கொண்டு, அன்ரனைனஸ் அடிகளாரும், ஸ்கூகாமர், எம். ஜி. பெரேரா, றொபேட் பேடின்ஸ், ராகவன், ராயன்ன, செலஸ்கி, ஞானாதிக்கம், ஜோசன் கொஜ்ரிலோ போன்றவர்கள் கரையார் சமூகத்தவர்களே மறைசாட்சிகளாக மரித்தனர் என்கின்றனர். ஜெ.சி.ரென்னென்ற், சுவாமி ஞானப்பிரகாசர், அன்ரன் மத்தாயஸ் போன்றோர் பரதவ சமூகத்தவர்களையும் இணைத்து பேசியுள்ளனர்.

மூல நூற்களை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும்போது "கரையார்" என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றிக் அன்றிக்கஸ் அடிகளார் தமிழில் பாண்டித்தியம் பெற்ற ஒருவர் என்று ஏற்றுக்கொண்டபடியால் அவருடைய இக்கருத்தையும் ஏற்றுக்கொள்ள எமக்கு வாய்ப்பளிக்கின்றது.

### நிறைவாக

வரலாறு இவ்வாறு அமைந்திருக்க சைவ சமயத்தில் இருந்து கத்தோலிக்கர்களாக மதம் மாறிய மன்னார் கிறிஸ்தவர்களின் நோக்கத்தை, அவர்களது உளப்பாங்கை பார்க்கின்ற போது, அம்மக்கள் உண்மையாகவே கிறிஸ்துவை பற்றி அறிய, கத்தோலிக்க விசுவாசத்தைப் பெற ஆவலாக இருந்திருக்கிறார்கள் என்பது தெளிவாக இருக்கின்றது. திருத்தொண்டர், மறைக்கல்வியை, கத்தோலிக்க திருச்சபை யின் முறைக்கேற்ப போதித்து, அவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்திய பிற்பாடுதான், திருச்சபையின் சரியான வழிபாட்டுச் சடங்கு முறைக்கேற்ப ஞானஸ்நானம் கொடுத்தார் என நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

எனவே கத்தோலிக்க சத்திய மறையைப் பின்பற்றிய மன்னார் மக்கள் தமது அரசனின் மிரட்டல்களுக்கு அஞ்சாது, தமது உயிரையும் துச்சமென மதித்து கத்தோலிக்க விசுவாசத்தில் வாழ எம்மை அழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே நாம் சபைகளை மாற்றிக் கொள்ளாமல், கத்தோலிக்க சமயத்தைப் பற்றிய அறியாமையை மாற்றிக்கொண்டு விசுவாச சாட்சிகளாய் வாழ்வோம்.

**அருட்திரு. க. அருள்பிரகாசம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாலத்துவ சபை தினச் சிறப்பிதழ்

## தேசிய இயக்குனரிடமிருந்து

**கிறிஸ்துவின் அனைவருக்கும் அன்பும், அருளும், ஆசீரும், சமாதானமும், வேண்டி நிற்கின்றேன்.**



எதிர்வரும் பங்குனி 5ம் திகதி தி.பா.சபை தினத்தை. கொண்டாட ஆவலுடன் இருக்கும் இவ்வேளையில் இயேசுவின் சிறிய மறைதூதர்களாக வாழ வளர கிடைத்துள்ள அழைப்பை தியானிப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பமாகும். இயேசு மொழிந்த முதல் வார்த்தை எளியோர்க்கு நற்செய்தி செல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை பெறுவர், என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும் ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பினார்." (லூக் 4:18-19) என மொழிந்த வார்த்தையை ஆழமாக தியானித்து எமது சிறிய வாழ்க்கையில் இவ்வாறான நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளதா? என்று யூபிலி ஆண்டில் சற்று சிந்திப்போம். வாழ்க்கையில் இவ்வார்த்தையை ஒப்பிட முடியுமா? எனவே இவ் யூபிலி ஆண்டில் அன்பும், ஒளியும், வாழ்வும் ஆக் திகழ சிறு வாழ்வை மாற்றியமைக்க முயற்சி செய்வோம். அன்பும், ஒளியும், வாழ்வும் என்ற நற்பண்புகளை பிறர் எம்மில் காண்கின்றார்களா? இறைவன் அன்பு என்னும் கட்டளையை உலகிற்கு தந்துள்ளார். இன்றைய நவீன உலகில் இறைவனின் அன்பை மக்கள் மறந்து வாழ்கின்றார்கள். எனவே இக்காலகட்டத்தில் மறைத்தூதர்களாகிய சிறுவர்கள் மக்களை இறையன்பில் இட்டுச் செல்ல உங்கள் சிறு வாழ்க்கையின் மூலம் சாட்சிகளாக வாழ வேண்டும். சாட்சிய வாழ்க்கையின் மூலம் பிறர் இறையன்பை சுவைக்க வேண்டும். இவ்வாறான வாழ்வை வாழவே உங்களை புனிதர்களாக, மறை தூதர்களாக அழைத்துள்ளார்.

இவ்யூபிலி ஆண்டில் இறைவன் உங்களிடம் எதிர்பார்ப்பது சீடர்களாக, புனிதர்களாக வாழ்ந்து இன்றைய உலகை மீட்டுக்கொள்வதாகும். இதற்கு நீங்கள் அளிக்கும் பதில் என்ன? புதிய சகாப்தத்தில் அன்பும், ஒளியும், வாழ்வும் ஆவோம் என்று பதில் அளிக்க ஆசித்து உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான தி.பா.சபை தினமாக வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன்.

**அருட்பணி. டோனி மாட்டின் (தேசிய இயக்குனர்)**
**19, பல்கம் இடம் – கொழும்பு – 8**

## தேசிய செயலரிடமிருந்து



இறையருள் ஊற்றெடுத்து பாயும் புதிய சகாப்தத்தில் மகிழ்வுடன் காலெடுத்து வைத்த திருப்பாலர் தம்பி தங்கையருக்கு இவ்வாண்டு ஒரு உன்னத ஆண்டாகும். திருத்துவத்திற்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். அதே வேளையில் யாவரும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். ஒரு புதிய ஆண்டில் நுழையும் போது பல இன்ப துன்பங்களை எதிர்நோக்குவதுண்டு. நாளுக்கு நாள் அழிவுகள், கொலைகள், கொள்ளைகள், போன்ற தீய நாட்டம் தலைவிரித்து ஆடுகின்றது. போர்மேகம், பசி, வறுமை, மனித இனம் மதிக்கப்படாது அழிவை நோக்கி செல்வதையும் நாம் காண்கின்றோம், கேட்கின்றோம். இவற்றை உற்று நோக்கும்போது இவற்றுக்கு இரையாவது எமது சிறார்கள் என்பதை அறிவோம். எனவே திருப்பாலர் சபை ஊக்குனர், ஆசிரியர்கள், பெற்றோர், பெரியோர்கள் உங்கள் கவனத்தை சிறுவர் சமுதாயத்தில் செலுத்தி இவர்களை ஆன்மீக ரீதியில் வழிகாட்டுவது எம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும் என்பதை மறக்க கூடாது.

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் மாபெரும் யூபிலி ஆண்டு விசுவாசிகள் பரிபூரண பலன் என்ற கொடையை நிறைவாக பயன்படுத்த இடமளிக்க வேண்டுமென கட்டளையிட்டுள்ளார். இதற்கு ஏற்ப சிறுவர் முதல் பெரியோர் வரை பாவ வாழ்வை களைந்து அருள் வாழ்வில் நிலைக்கவும் இயேசுவின் அன்பினை ஆழமாக சுவைத்து வாழவும் அழைக்கப்படுகின்றோம். அருள் நிறைந்த இவ்வாண்டில் திருப்பாலர் சபை சிறுவர்களை இதற்கு ஏற்ப ஊக்குவிக்க வேண்டும். நற்செய்தியை அறியாத மக்கள் நற்செய்தியை அறிந்து இயேசுவில் விசுவாசத்தில் வாழ மன்றாடும்படி கூற வேண்டும். அத்துடன் எமது நாட்டலும் வெளிநாட்டிலும் துன்புறும் சிறுவர்களுக்காக செபத்தின் மூலமும் பொருள் உதவி மூலமும் ஒத்துழைப்பை வழங்கி ஊக்குவிக்க வேண்டும். திருப்பாலர் சபையை ஆரம்பித்த ஆயர் சாள்ஸ் டீ போபின் ஜான்சனின் குறிக்கோளுக்கு ஏற்ப இளம் பராயத்திலிருந்தே இயேசுவை ஆழமாக அறியவும் கிறிஸ்தவ நற்பண்புகளை வாழ்வில் கடைப்பிடிக்கவும் சிறுவர்களை வழிநடத்தி அவர்களின் விசுவாச வாழ்வை ஆழப்படுத்துவதுடன் சிறுவர்களைக் கொண்டு சிறுவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் பகிர்ந்து வாழும் மனப்பான்மையை இவர்கள் உள்ளத்தில் வேரூன்றச் செய்வதுமே இவரது தனியாத ஆசையாகும். இதன் வழியாக இயேசுவின் சிறிய மறைதூதர்களாக மாற்ற வேண்டும் என்ற இலட்சியம் கொண்டிருந்தார். இதே இலட்சிய பாதையில் எம் சிறார்கள் பயணம் செய்ய எமது மறைமாவட்டங்களில் பங்குகளில் மலர்கின்ற திருப்பாலர் சபையில் சிறுவர்கள் அங்கத்துவம் பெற்று இறை மணம் பரப்ப அழைப்பு விடுகின்றது. எனவே இவ்வினிய நன்னாளில் உங்கள் அன்பு பிள்ளை செல்வங்களை இன்றே உங்கள் பங்கில் செயல்படும் திருப்பாலத்துவ சபையில் சிறுவர்களை சேர்த்திடுங்கள். நன்றே உருவாகி என்றும் மறைபரப்ப பெற்றோர், பெரியோர் ஊக்குவியுங்கள். இன்றைய சிறுவர்கள் நாளைய திருச்சபையின் நம்பிக்கையின் நட்சத்திரங்கள். எனவே "சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் தடுக்க வேண்டாம், ஏனெனில் விண்ணரசு இவர்களுக்குரியது" என்ற இயேசுவின் உயிர் உள்ள வார்த்தைக்கு ஏற்ப கள்ள கபடமற்ற தூய உள்ளம் கொண்ட சிறுவர்கள் இயேசுவின் வாழ்வை தனது வாழ்வாகக் கொண்டும் இன்னும் பல நண்பர்களை இயேசுவின் பக்கம் இட்டுச் செல்ல வழி செய்யுங்கள். இவர்களது சிறு வாழ்க்கையின் மூலம் இயேசுவை ஆழமாக அறிந்து, அறியும் இயேசுவின் வாழ்க்கையை மற்றவர்களுடன் பகிர்ந்து வாழ யாவரும் ஒத்துழைப்பை வழங்குவோம். அத்துடன் திருப்பாலர் சபை தினத்தை மங்களகரமாக கொண்டாடும் இவ்வேளையில் இப்பணியை தொடரும் அனைத்து உள்ளங்களின் சேவை மலரவும் சிறுவர்கள் இப்புதிய சகாப்தத்தில் அன்பும், ஒளியும், வாழ்வும், ஆக திகழ இறை அருள் ஆசிப்போம்.

**அருட் சகோ. நிர்மலா – (தேசிய செயலாளர்)**
**19பல்கம் இடம் – கொழும்பு – 8**

## மறைமாவட்ட இயக்குனரிடமிருத்து

**"நல்ல பண்பிலே வளர்த்திடுங்கள்"**



பிரான்ஸ் நாட்டை லூயிஸ் அரசன் ஆட்சி செய்து கொண்டிருந்தபொழுது அவன் தாய் அரசனைப் பார்த்து அடிக்கடி சொல்லுவாள். " மகனே உன்னை நான் அதிக வாஞ்சையோடு நேசிக்கின்றேன். நீ ஒரே ஒரு சாவான பாவத்தால் உன் ஆன்மாவைக் கறைப்படுத்துவதைவிட என் பாதத்தண்டையில் நீ பிணமாய் கிடப்பதையும் பிரான்ஸ் நாட்டு அரியணை காலியாக இருப்பதையுமே நான் விரும்புகிறேன்". ஓர் அன்னையின் கரிசனை நிறைந்த வார்த்தைகளால் ஒரு காலத்தில் அரசராக இருந்த லூயிஸ் இன்று திருச்சபையை அலங்கரிக்கும் ஒரு புனிதராகத் திகழுகின்றார்.

சமுதாயத்திலே பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையைப் பற்றியும் நமது திருச்சபையும், நமது நாடும் கவலையோடும் மிகுந்த கரிசனையோடும் இருக்கின்றது. இன்னும் பத்து அல்லது இருபது வருடங்களில் இச்சிறார்கள் எல்லோரும் எங்கு இருப்பார்கள் எப்படி இருப்பார்கள் என்னவாக இருப்பார்கள் என்பதைப் பற்றியே அக்கறையோடு செயல்படுகின்றனர். ஒரு குழந்தையின் ஆரம்பக் கல்விக் கூடம் வீடு என்னும் பாசறை. பெற்றோரே இக்குழந்தைகளின் முதல் ஆசிரியர்கள்.

1984ம் ஆண்டில் உரோமை நகரில் நடைபெற்ற மாபெரும் மகாநாட்டிலே "சிறுவர்கள் தான் மனுக்குலத்திற்கு நம்பிக்கையின் நட்சத்திரங்கள்" என்ற ஆழமான சிந்தனையை திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அழகாகக் கூறியுள்ளார். "குழந்தைகட்கு பொருள் தேடி வைப்பதை விட நல்ல பழக்கங்களை பழக்கி வைப்பதே தந்தை தேடி வைக்கும் உண்மைச் செல்வம் ஆகும்" என்று வாட்லி என்ற அறிஞன் தெளிவாக கூறுகின்றான். "கலைகளில் எல்லாம் சிறந்த கலை பிள்ளைகளை நன்றாகவும் பண்பாகவும் வளர்க்கும் கலை" என்று பாப்பரசர் 13ம் சிங்கராயர் கூறியிருக்கின்றார்.

உலகிலே ஒவ்வொரு வினாடியும் எத்தனையோ குழந்தைகள் பிறந்து கொண்டே இருக்கின்றனர். உலகிலே காலடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு குழந்தையும் நல்ல குழந்தையாக தெய்வக் குழந்தையாக உருவாக்கப்படுகின்றதா? என்பதே பெரிய கேள்விக்குறியாக அமைந்துள்ளது. குழந்தைகளுக்கு இடறலாய் இருப்போரை இயேசு வன்மையாகக் கண்டித்தார். குழந்தைகளிற்கு தகாத பழக்கங்களை பழக்குவோர் தீமை பயக்கும் கல்வியை புகட்டுவோர் குழந்தைகளின் பிஞ்சு நெஞ்சங்களிலே பிரிவினை, பொறாமை, வித்துக்களை விதைப்போர் போன்றவர்களைப் பார்த்து இயேசு "இடறல் யாரால் வருகின்றதோ அவனுக்கு ஐயோ கேடு! என்று எச்சரிப்பதைப் பார்க்கின்றோம். அதேவேளை இயேசு எவ்வாறு சிறுவர்களை வழிநடத்தினார் என்பதை சிந்திக்கும் பொழுது".

- "ஆண்டவர் இயேசு அவர்களை ஆசீர்வதித்தார்" மாற்கு 10:16
- அவர்களைப் பாதுகாக்கும்படி பெரியோரைப் பணித்தார். மத்தேயு 18:6
- விண்ணரசு அவர்களைப் போன்றோருக்கு உரியதென அறிவித்தார். லூக் 18:16

எனவே பெற்றோர்களே! அதிக அளவிலே பிள்ளைகளைப் பெற்று எடுப்பதினால் மாத்திரம் நீங்கள் பெற்றோராக மாறிவிடுவதில்லை. அல்லது அவர்களுடைய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள், சுகாதாரம், கல்வி போன்றவற்றை அளித்தால் மட்டுமே பெற்றோராக மாறிவிடுவதில்லை. வளர்ந்த பிள்ளைகளை உயர்ந்த தரமான கல்லூரிகளிற்கு அனுப்பிக் கல்வியைப் புகட்டுவதினால் மாத்திரம் பெற்றோராக மாறிவிடுவதில்லை. மாறாக நல்ல பண்புகளை, நல்ல மதிப்பீடுகளை, நல்ல கிறிஸ்தவ விழுமியங்களைக் கற்றுக்கொடுக்கும் போதுதான் உண்மையான பொறுப்புள்ள கிறிஸ்தவப் பெற்றோராக நீங்கள் மாறமுடியும்.

புதிய சகாப்தத்திலே காலடி எடுத்து வைத்திருக்கும் பெற்றோர், பெரியோர், வழிகாட்டிகள், ஊக்குவிப்பாளர்கள் அனைவரும் பிள்ளைகளிற்கு அன்பாகவும், ஒளியாகவும், வாழ்வாகவும் ஆகிட அழைக்கப்படுகின்றீர்கள். இதை ஒரு சவாலாக ஏற்றுச் செயற்பட திருப்பாலத்துவசபை தினம் உங்கள் ஒவ்வொருரையும் அழைத்து நிற்கின்றது. இவ்வழைப்பை ஏற்போம்! செயற்படுவோம்!

**அருட்தந்தை. நோபேட்**
**திருப்பாலத்துவ சபை இயக்குனர்**
**மன்னார்.**

## சிறுவர் ஆண்டு

மலரும் சிறு மொட்டுக்களே!
இறைவனின் சின்னச் சிட்டுக்களே!
மலரும் இந்த ஆண்டிலே!
மகிழ்வுடன் ஒன்றாய்க் கூடிடுவோம்.
திருப்பாலர் சபைதனைப் பரப்பிடவே
அனைவரும் ஒன்றாய்க் கூடிடுவோம்.
பெற்றோர் குரு ஆசிரியரை,
வணங்கி மரியாதை செய்திடுவோம்.
பாடசாலை தன்னிலே
பாடம் நன்றாகக் கற்றிடுவோம்.
மலர்ந்து இருக்கும் சிறுவர் ஆண்டிலே
அனைவரும் அன்பாய் வாழ்ந்திடுவோம்
சிறுவர் ஆண்டாம் எம் ஆண்டாம்
சிறுவர் எம்மை வழி நடத்தும்.

**ஞ. துவாரஹன் – தரம் – 6 டி**
**உப்புக்குளம் – மன்னார்.**

## யூபிலி ஆண்டு 2000

ஆண்டு இரண்டாயிரம் அவனியில் தோன்றிட
ஆண்ட நம் கிறிஸ்து அன்பது பெருகிட
நீண்ட ஆண்டுகள் நிம்மதி பெற்றிட
மாந்தர் எம் இயேசு மாண்பது ஒளிர்ந்திட

அலை பாயும் உலகில் அலைந்திடும் எம்மவர்
ஒருவரோடொருவர் ஒன்றித்து வாழ்ந்து
உள்ளதை உடமையை ஒளிவின்றி பகிர்ந்து
சீரிய வாழ்வினை நிறைவுடன் வாழ்ந்திட

அன்பும் பண்பும் அருளும் பொழிந்து
அரவணைத் தெமக்கு அரணாய் நின்றிடும்
கிறிஸ்து அளித்திடும் ஆண்டு இரண்டாயிரம்
ஆண்டதில் அவர்க்கே அன்பினை அளிப்போம்.

அகிலத்தில் மலர்ந்த ஆண்டதில்
பாலர்களாகிய நாங்கள் இயேசுவின் பாதையில்
சென்று பார் புகழும் உத்தமர்களாய்
படைத்தவரின் திருவுளத்தை நிறைவேற்ற துணிந்திடுவோம்.

**த.அன்ரனி ஷனோ –ஆண்டு 5**
**மன்புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை**

## சிறு மலர்கள்

சின்னஞ் சிறு மலர்கள் போல்
சிந்திடும் தேனமுதம் போல்
சிறகடித்து பறந்திடும் வண்ணக் குருவிகள் போல்
சிந்தை குளிர வைக்கும் சின்னஞ்சிறு பாலகர் நாம்
மழலை மொழி பேசி மனதை மகிழ வைக்கும்
கள்ளங் கபடமற்ற எம் உள்ளமே
எல்லோர்க்கும் தேவையென்றார் எம் பெருமான் இயேசுபிரான்
மலர்ந்திட்ட யூபிலி ஆண்டிலே
மணம் வீசும் மலர்களாய் மகிழ்ச்சியின் நிறைவிலே
மாண்புடன் வாழவே அழைக்கின்றார் இறைவன்
[illegible] சிறுமலர்கள் போலவே

**எம். அன்ரன்றாஜ் – தரம் 5 சி**
**மன்புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியலை நோக்கி

ஒரே இறைவனால் ஒன்றே குலம், ஒன்றே மதம் என்று படைக்கப்பட்ட மனிதன், இன்று ஒன்றுமையிழந்தவனாக, தனக்குள்ளே பிளவுபட்டவனாக, வாழ வழி தெரியாமல் துடித்துக் கொண்டிருக்கின்றான். வாழப் பிறந்த மனிதன் இன்று வாழ்வைத் தேடி அலைகின்றான். அழகான சமுதாய மாக, அன்பான குடும்பமாக, பண்பான குலமாக வாழவே இறைவன் மனிதனை தன் சாயலாகப் படைத்தார். ஆனால் இன்று அழகான சமுதாயம் அலங்கோலமாக அல்லல் பட்டுக்கிடப்பதையும், அன்பானவனாக, பண்பானவ்னாக வாழப் படைக்கப்பட்டவன் இன்று அடக்குமுறைகளுக்கு அடிமைப்படுவதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

எங்கு பார்த்தாலும் மனிதன் அலைகின்றான் அகதியாய், ஏங்குகின்றான் ஒரு நேர உணவிற்காய், காத்திருக்கின்றான் சொற்ப நேரம் நிம்மதியாய் உறங்குவதற்காய். நிரந்தரமாக ஒரு நிலத்தை தனதாக்கிக் கொள்வதற்காகவும், தன் உடன் பிறப்புக்களுடன் தன் காலத்தை சந்தோஷமாய் கழிப்பதற்காகவும் காலங்காலமாய் தனிமையில் தவிக்கின்றான். இவை எல்லாவற்றுக்கும் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். தன் இயலாமையாலும், கஸ்ரங்களாலும் காலத்தை நொந்து கொள்கின்றான். இறைவனால் கொடுக்கப்பட்ட காலமோ போய்க்கொண்டிருக்கின்றது. ஆனால் மனிதனோ அடைய வேண்டிய பயனை சொற்ப அளவில் கூட அனுபவிக்காது இருக்கின்றான்.

ஆம். இத்தனைக்கும் யார்த்தான் காரணம். இவையனைத்திற்கும் நாம் ஒவ்வொருவருமே காரண கர்த்தாக்களாய் இருக்கின்றோம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஒரே இறைவனால் படைக்கப்பட்ட எமக்குள்ளாகவே இனம், சாதி, சமய வேறுபாடுகளை நாம் ஒவ்வொருவருமே ஏற்படுத்திக் கொள்கின்றோம். மற்றும் படித்தவன், ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி வர்க்கம் போன்ற வேறுபாடுகளின் அடிப்படையிலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மற்றும் தொழிலில், அதிகார தன்மையில் பாரபட்சமான நீதி நியாயத் தன்மை. இவ்வாறாக நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையைப் போக்கினால் தான் நாம் இன்று ஓர் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இந்நிலையிலே விடியல் எங்கே, விடிவு எங்கே, எமக்கோர் அமைதியான வாழ்வு எங்கே என்று நாம் கூக்குரலிட்டாலும் அந்த நிம்மதியான விடியல் பாதை எவ்வாறு நமக்கு கிடைக்கும். நாம் அமைதியுடன் வாழ வேண்டும் என்றால் நாம் ஒவ்வொருவரும் மாற்றம் அடைய வேண்டும். நம் சிறு

## சிறுவர் மொழி

உள்ளங்கள் ஒவ்வொன்றையும் தூய்மையாக்கி கொள்ள வேண்டும்.

பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து மக்கள் எவ்வாறு மீட்பு வாழ்விற்காக காத்திருந்து செபித்தார்களோ நாமும் இறைவனிடம் செபிக்க வேண்டும். வீதியோரம் அலைந்து திரியும் அனைத்து அனாதைகளின் வாழ்வையும் நாம் சீர்திருத்தவேண்டும். கல்மனம் படைத்த பிள்ளைகளால் விரட்டப்பட்ட ஒவ்வொரு முதிர்ந்த பெற்றோரையும் ஆதரிக்க வேண்டும். தனிமையில் தவித்திருப்பவனுக்கு ஆறுதல் கூற வேண்டும். ஏழை எளியவர்களுக்கு அன்பு செலுத்த வேண்டும். நிபந்தனையற்ற அன்பில் நாம் ஒவ்வொருவரும் வாழவேண்டும். பழி வாங்கும் உணர்வு, வரட்டுக் கௌரவம், போன்றவற்றை ஒழித்து பரிவு காட்டவேண்டும். நம்முள்ளிருக்கும் இவ்வாறான ஒவ்வொரு கெட்ட பண்புகளையும் நாம் அகற்றி வாழ்வோ மானாலும் நிட்சயம் நமக்கோர் விடியல் உருவாகும். எனவே நல்லதோர் வாழ்க்கை வாழ்ந்து விடியலை நோக்கி காத்திருப்போம்.

ஜெ.கனியூட் – ஆண்டு 8 ஏ

## நன்றியுடன் நோக்குகின்றேன்

எனது தாயின் வயிற்றில் கருவாகி வளர்ந்ததிலிருந்து என் தாய் நினைத்தது போல் வளர்வேனா என்று நினைத்தேன். அதன்படி நடப்பேனா! எனக்கு சிறுவயதென்றாலும் அம்மா காட்டும் அன்பினால் அன்பு என்பதை அறிந்தேன். நான் சிறுவன், அம்மா எழுதத் தெரியாது. எனினும் ஆசிரியர் காட்டும் உபகரண அன்பில் படிப்பறிந்தேன் எனினும் தந்தை காட்டும் அறிவுரைகளில் படித்தேன். எனக்கு பாடசாலையிலும் ஆசிரியரும் அறிவுரைகள் கூறுவார்கள். நான் அதை ஏற்று வாழ்வேன். நான் சிறுவயதிலிருந்தே தாய்தந்தைக்குப் பணிந்து வாழ்ந்து வந்தேன். நான் பிறந்ததிலிருந்து இற்றைவர என்னைக் காத்துவரும் கடவுளுக்கு ஒவ்வொரு நாளும் நன்றி கூறுவேன். நான் பிறந்ததிலிருந்து இன்றைவரை என்னை பாராட்டி சீராட்டி வரும் தாய்க்கும் எனக்கு நல்லதொரு தந்தையாய் இருந்துவரும் பெற்றோருக்கும் நான் எப்பொழுதும் நன்றியாய் இருப்பேன்.

ச.ஆரோக்கியதாஸ்
ஆண்டு 8 ஏ – மன்புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை

## காலம் கடந்த ஞானம்

ஒரு ஊரிலே ஒரு செல்வந்தர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு பெரிய வியாபாரி. அவர் பல வழிகளிலே தனது விடாமுயற்சியால் உழைத்து பெரும் பணக்காரர் ஆனார். அவர் திருமணமாகி பல பிள்ளைகளுக்கு தந்தையானார். இறைவன் அவருக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை. இதனால் அந்த செல்வந்தர் பெருமிதம் கொண்டவராக கூறுவார். இறைவன் என்னோடு இருக்கின்றார். எனக்கு எந்த குறைவுமில்லை என்று அவருக்கு பல இலட்சக்கணக்கான பணமும் ஏராளமான சொத்துக்களும் இருந்தது. அவரிடம் யார் சென்று உதவி கேட்டாலும் இல்லை என்று கூறிவிடுவது அவரது வழக்கம். ஏழைகளை கண்டால் அவருக்கு வெறுப்பு எவருக்குமே இரங்கி எதுவுமே கொடாதவர்.

இத்தனைக்கும் அநத செல்வந்தர் ஒரு "கத்தோலிக்கர்" எத்தனை முறை திருப்பலிக்குச் சென்றாலும் எத்தனை மறையுரை கேட்டாலும் அவர் திருந்துவதாக இல்லை. இப்படியே அவரது வாழ்க்கை சில வருடங்கள் மகிழ்ச்சியாய் ஓடியது. ஒரு நாள் யோபுவுக்கு வந்ததுபோல அவரது வாழ்விலும் சோதனை வந்தது. திடீரென ஏற்பட்ட புயல் காற்றாலும் வெள்ளப் பெருக்காலும் அவரது மாளிகை போன்ற வீடும் சகல சொத்துக்களும் அழிந்து போய்விட்டது. கடவுளின் உதவியால் இவரும் இவரது மனைவி பிள்ளைகளும் உயிர் பிழைத்தனர். இருக்க இடமின்றி உடுக்க உடையின்றி உண்ண உணவின்றி தவித்தார். செல்வந்தர் மாளிகையில் வாழ்ந்த செல்வந்தக் குடும்பம் மர நிழலில் தஞ்சமடைந்தனர்.

மர நிழலில் உட்கார்ந்தபடி சிந்திக்கலானார். அவரது மனக்கண்முன் பழைய நினைவுகள் திரைப்படம் போல் காட்சி தந்தன. அவரது பங்குத்தந்தை ஆற்றிய மறையுரையும் அவர் கூறிய அறிவுரைகளையும் தான் அலட்சியம் செய்த காட்சியும் அவரது மனக்கண்முன் சிறிது நேரம் நிலையாய் நின்றது. "உன்னைப்போல் உன் அயலானை நேசி என்றும் பணக்கார விவசாயி தனது களஞ்சியங்களை தானியங்களால் நிரப்பியதையும் எந்தப் பலனையும் அடையாமல் அவன் இறந்ததையும் மனம் திருந்துதலுக்காக குருவானவர் எத்தனை முறை எத்தனை கருத்துக்களையும் கூறியும் நான் திருந்தவில்லையே என அழுது புலம்பலானார். குருவானவர் கூறியதுபோல் எனது பண நோட்டுக்களால் பலரின் பசியை போக்க நான் முயற்சி செய்யவில்லையே பணக்கார விவசாயி செய்த தவறுபோல நானும் தவறு செய்துவிட்டேனே என வருந்தலானார். அப்போது பசியின் கொடுமை தாங்கமுடியாமல் அவரது குழந்தைகள் துடியாய் துடித்தன! செல்வந்தனாய் வாழ்ந்தவருக்கு அன்றுதான் பசியின் கொடுமை தெரிந்தது. அவர் செய்வதறியாது மீண்டு அழலானார் அந்த வேளையிலே யாரோ தன்னை தொடுவதை உணர்ந்தார். ஆம் அது வேறு யாருமல்ல அவரது பங்குத்தந்தைதான். கையில் உணவு ஏந்தியபடி தனது பங்குத் தந்தையை கண்டதும் அவரது காலில் விழுந்து தனது அறியாமைக்கு மன்னிப்புக் கேட்டார். இனிமேல் நான் ஏழைகளை மதிப்பேன் ஏழைகளுக்காகவே வாழ்வேன் என உறுதி பூண்டார். அன்புச் சகோதரர்களே இந்த செல்வனைப் போல இறைவனின் வார்த்தைகளை நாம் அசட்டை செய்யாமல் எம்மிடம் உள்ளதை ஏழைகளிடம் பகிர்ந்து வாழ்வோம்!

அந்தோனி அருளப்பு
இலுப்பைக்கடவை

## நானிலம் போற்ற வாழ்ந்திடுவோம்



*பிதாவையும் மாதாவையும் துதித்திடுவோம்*
*பத்துக் கட்டளைப்படி நடந்திடுவோம்.*
*இயேசுவின் அன்பைப் பகிர்ந்திடுவோம்.*
*காசினியில் நல்வாழ்வு கண்டிடுவோம்.*

*அறியாமை தனை அகற்றிடுவோம்*
*அயலாருக்கு உதவிடுவோம்*
*அலட்சியத்தை வெறுத்திடுவோம்*
*இலட்சியம் ஒன்றெனக் கொண்டிடுவோம்.*

*கள்ளமதை விலக்கிடுவோம்*
*வெள்ளை மனம் கொண்டிடுவோம்*
*சாதி மதபேதம் விரட்டிடுவோம்*
*சமாதானமாய் வாழ்ந்திடுவோம்*

*ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என முழங்கிடுவோம்.*
*ஒற்றுமையில் உயர்வு பெற்றிடுவோம்*
*நற்செய்தியில் மனதை நிரப்பிடுவோம்*
*நானிலம் போற்ற வாழ்ந்திடுவோம்.*

ஜெ.தினேஸ்காந்
ஆண்டு 9
மன்புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை

## வாரும் இயேசுவே

வேறு ஏதாவது
இயேசு படம்

சின்னஞ்சிறு சிறார்களின்
சிந்தையிலே வந்திடும் – இயேசுவே
சிறந்த வழியிலே என்றும் – நாம்
வாழ்ந்திட வரம் அருளும் – இயேசுவே

வாழ்வு தரும் வார்த்தையிலே
வந்து எம்மில் தங்குமே
வாழ்வில் என்றும் உதவிட
என்னில் வாரும் இயேசுவே

அயலவனை அன்பு செய்ய
அருள் தாரும் – இயேசுவே
அன்பிய வாழ்வில் வாழ்ந்திட
அரவணைப்பீர் – இயேசுவே

மலர்ந்து விட்ட ஆண்டிலே
மாணவர்களாகிய நாமெல்லாம்
மலர்களை போன்ற மனத்தினை
மகிழ்வுடன் அர்ப்பணிப்போம்.

செல்வன். கு.இபிரதீப் – ஆண்டு 5
மன்புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை

## இன்றைய சிறுவர்களின் நிலை

இன்றைய சிறுவர்களே நாளைய திருச்சபையின், நாட்டின் தலைவர்கள், பொறுப்பாளிகள் எனக் கூறுவது சாலப் பொருத்தமானது. இந்தச் சிறார்களின் இன்றைய நிலை பற்றி சற்று சிந்திப்போம். இறைமகன் இயேசு விரும்புவதும் இப்பிஞ்சு உள்ளங்களைத்தான். இதற்கு வேதாகமத்தில் பல உதாரணங்கள் இருக்கின்றன. எனவே இவர்கள் இன்று தமது உரிமையை சுதந்திரத்தை ஏன் எதிர்கால வாழ்வைக் கூட பறிகொடுத்த ஒரு துர்பாக்கிய நிலைமைய அடைந்துள்ளர். இதற்கு காரணம் என்ன? போர். பெற்றோரின் அன்பில் அணைக்கப்பட வேண்டிய சிறுவர்கள் கண்ணீரின் அணைப்பில் கலங்குகின்றனர். உறவுகளை பறிகொடுத்து சிறகிழந்த பறவை போல தத்தளிக்கின்றனர். கைகளிலே புத்தகம் சுமந்து உல்லாசமாக துள்ளிப்போகும் பள்ளி வயதிலே வீதிகளிலும் கடைகளிலும் கையேந்தும் அனாதை என்னும் பெயரை சுமக்கின்றனர். தாயன்பிற்காக தந்தை அன்பிற்காக அலைகின்றனர். ஒவ்வொரு சிறுவரினதும் சூழலும் வித்தியாசமானது. அவர்கள் வாழும் சூழ்நிலையே சிறுவர்கள் என்ற நிலையிலிருந்து அவர்களை பிரித்தெடுத்து கடின உள்ளம் கொண்ட எதற்கும் அஞ்சாத இறை நிலையிலிருந்து பிரிந்து காணப்படும் ஒரு எதிர்கால சமுதாயத்திற்கு வழி சமைக்கின்றது. எனவே இன்றைய சிறுவர்களின் இந்தநிலை ஒழிந்து ஒளிமயமான சிறார்களின் எதிர்காலம் உதயமாக வேண்டும் என ஆவலுடன் எதிர்பார்க்கின்றேம்.

தே. டெய்சி – ஊக்குவிப்பாளர்
உயிலங்குளம்.

## சிறுவர்களை இயேசு எப்படி அழைக்கிறார்

1. இன்றைய சமுதாயத்தில் சிறுவர்களாகிய நாம் ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழ அழைக்கப்படுகின்றோம்.
2. இந்த யூபிலி ஆண்டில் ஆண்டவராகிய இயேசு நம்மை தன்னிடம் வரும் படி அழைக்கின்றார்.
3. நாம் அவரை பிரிந்து விலகிச் சென்றாலும் அவர் எம்மை பின் தொடர்ந்து நம்மை அவர் அன்புறவில் வாழ அழைத்துக் கொள்கிறார்.
4. அவர் நம் இதயக் கதவை தட்டிக் கொண்டே இருக்கின்றார்.
5. அவர் எங்களது உண்மையான மிகவும் நல்ல தந்தையாக இருக்கிறார்.

பீ.சி.கஜேந்திரன் – ஆண்டு 5.சி
மன். புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள்


ஓர் சமுதாயத்தின் அடித்தளமாக விளங்குபவர்கள் சிறுவர்கள். சிறுவர்களின் உள்ளங்கள் ஓர் கள்ளம் கபடமற்ற சின்னஞ்சிறு உள்ளங்களாகும். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். ஆதலால் சிறுவர்களே சமுதாயத்தை முன்னேற்றுகின்ற கருவிகளாகும். மனிதர்கள் என்ற அடிப்படையில் சிறுவர்களுக்கும் தமது உரிமைகளைப் பாதுகாப்பது ஓர் கடமையாகும். அதாவது சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம் என்பதை விளக்குவோமானால்.

மானிட வாழ்க்கையில் திருமணம் என்னும் புனித உறவின் பயனாக இறைவன் மனிதனுக்கு கொடுக்கின்ற அதி உயர்ந்த செல்வம் பிள்ளை செல்வம். அந்தப் பிள்ளைச் செல்வம் தாயின் கருவிலிருந்து உலகிற்கு உதயமாகின்ற போது அந்தத் தாயின் உள்ளம் கொள்ளும் மகிழ்ச்சியினை அளவிட முடியாது. அவள் தனது அன்பின் அடையாளமாக தனது குருதியையே பாலாக ஊட்டி சீராட்டி அப்பிள்ளைக்கு எல்லாவித ஆபத்துக்களில் நின்றும் காப்பாற்றுகின்றாள். தந்தையோ குழந்தையின் அறியாமை என்னும் இருளை நீக்கி அறிவை ஊட்டி சமுதாயத்தில் ஓர் மனிதனாக உருவாக்குகின்றார். இவ்வாறு அன்பின் அரவணைப்பிலும் அறிவின் உயர்விலும் வளர்க்கப்படுகின்ற சிறுவர்களுக்கு வீட்டிலும் சரி சமூகத்திலும் சரி உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இதன் பயனாக வளர்ச்சியின் முழுமையான போக்கில் செல்லுகின்ற சிறுவர் தனது வாழ்வில் பின்னடைவைச் சந்திக்கின்றனர். ஒரு கவிஞன் சொல்கின்றான்.

***"வேப்ப மர உச்சியில் நின்று பேயொன்று ஆடுதின்னு விளையாட போகும்போதே சொல்லி வைப்பாங்க. எங்கள் வீரத்தையே முளையிலேயே கிள்ளி வைப்பாங்க."***

ஆம் குழந்தைப் பருவத்திலேயே ஒரு துணிவான, வீரமான, மனிதனாக வாழ வேண்டியகுழந்தைகள் அதாவது சிறுவர்கள் தாய் தந்தையின் அச்சமூட்டுகின்ற செயலினால் கோழையாகின்றனர். இதுவும் சிறுவரின் உரிமையை பறித்தெடுக்கின்ற ஒரு தன்மையே.

அடுத்து பச்சிளம் பாலகச் செல்வங்கள், எம் போன்ற சிறுவர்கள் பணவெறி கொண்ட பணக்காரர் வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்படல். ஆம், சிறுவயதில் குடும்பத்தில் பொருளாதார ரீதியில் ஏற்படுகின்ற பிரச்சனையின் பயனாக இச்சிறுவர்கள்



வேலைக்காராக மாறுகின்றனர். வேலையெனும் பாரச்சுமை குழந்தைகளின் தோள் மீது சுமத்தப்படு கின்றது. இதனால் தமது கல்விப் பருவத்தில் சொல்லொண்ணாத் துன்பத்தை அனுபவிக் கின்றனர். வேலை செய்கின்ற போது சிறு பிழைகள் ஏற்பட்டபோதும் அவ்வீட்டு எஜமாட்டியால் அச்சிறுவர்களுக்கு பல தரப்பட்ட துன்பங்கள் ஏற்படுகின்றன. இதுவும் சிறுவர் உரிமைகள் பறிக்கப்ப டுகின்றன ஒரு சந்தர்ப்பமே ஆகும்.

அடுத்து சிறுவர் பாலியல் ரீதியாக பாதிக்கப்படுகின்றமை. அதாவது நன்மை எது, தீமை எது என்பதை பகுத்து அறிய முடியாத சிறுவர்கள் பலதரப்பட்ட பாலியல் வல்லுறவுகளுக்கு உட்படுகின்றனர். இதனை நாம் எமது நாட்டிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி காணும் உண்மை. வளர்ச்சியின் முழுமையாக வளர வேண்டிய சிறுவர் சிறுவயதிலேயே கண்களற்ற மூர்க்கர்களினால் பாதிப்படைகின்றனர். இப்படியாக சிறுவர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றபோது சிறுவர் சில தீய பழக்கங்களுக்கு ஆளாகின்றனர். உதாரணமாக பொய் சொல்லல், களவெடுத்தல், புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்றவற்றைக் கொள்ளலாம்.

எனவே தான் சிறுவர்கள் தமது உரிமைகளை பாதுகாக்கவேண்டுமெனில் அவர்களின் பேச்சுச் சுதந்திரத்திற்கு முதலில் முன்னுரிமை கொடுத்தல் வேண்டும். சில விடயங்களில் அவர்களுக்கு சுதந்திரமாக செயற்பட விடப்படவேண்டும்.

பணவெறி கொண்டவர்கள் சிறுவர்களை வேலைக்காரர்களாக அமர்த்தாது அவர்களின் பொருளாதார ரீதியிலும் சரி, கல்வி விடயங்களிலும் சரி அவர்களின் வளர்ச்சியில் கவனமெடுக்கவேண்டும். இதன் பயனாக அச்சிறுவர்கள் அடிமையென்ற சிறையை உடைத்து சுதந்திரம் கொண்டவர்களாக வாழ வழி சமைத்து கொடுக்கலாம்.

இவற்றின் மூலம் நாளைய உலகைக் கட்டியெழுப்ப வேண்டிய சிறுவர்கள் சுதந்திரம் உள்ளவர்களாக, நாட்டினதும், சமூகத்தினதும் தலைவர்களாக மாற்றவேண்டிய கடமை உண்டு. இதன் பயனாக எமது தாய்த் திருநாடும் சிறுவர் உரிமையை பாதுகாக்கின்ற ஒரு நாடாக விளங்குவதோடு நாமும் சிறுவர் உரிமையின் பாதுகாவலர்களாக மாற்றப்படுவோம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**அமர்நாத் – ஆண்டு 8 ஏ**
**மன்புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை**

## ஒரு தந்தையின் ஏக்கக் குரல்

மகனே நீ பிறந்தபோது நான் மட்டில்லாத மகிழ்ச்சியடைந்தேன். மார்பிலும் தோளிலும் மாறி மாறி உன்னை சுமந்தேன். உன்னை வளர்த்தெடுத்து மனிதனாக்க மாடாக நான் உழைத்தேன். வளர்பிறைபோல் நீ வளர, தேய்பிறைபோல் நான் தேய்ந்தேன். தத்தி தத்தி நீ நடக்க ஆதரவாய் நான் இருந்தேன். நீ வளாந்து மரமாகி நிழல் தருவாய் என்றிருந்தேன். நீ வுளர்ந்தாய் ஆனால் நிழல் தர மறுக்கின்றாய். என் அருகில் நீ இருந்தால் இடைஞ்சல் பல என்று இடைவெளிகள் வைத்தாயோ. மைந்தா! என் மைந்தா! சொல்லி அழ யாருமில்லை. சொந்த பந்தம் ஏதும் இல்லை. காலம் இது நல்லம் இல்லை. என் காலும் ஒன்று நல்லதில்லை. என் ஊன்றுகோலாய் நீ இருந்தால். என் உள்ளமது பூரிப்பாகும். உள்ளமது பூரிப்பானால் மகிழ்ச்சியுடன் நான் மரிப்பேன். ஓர் இரு மாதங்களில் போகப்போகும் என் உயிரை மகிழ்வுடனே போகவிடு. காணத்துடிக்கின்றேன் என் மகனே காட்டாயோ உன் முகத்தை.

**அந்தோனி அருளப்பு**
**அந்தோனியார் புரம்**
**இலுப்பைக் கடவை.**

## அமைதியை தேடி

வாழப் பிறந்த மனிதனுக்கு
வாழ்க்கையோர் இருட்டறை
பொழுதோ விடிந்துவிட்டால்
ஏனப்பா விடிகின்றாய் – என
கேள்விகளோ ஆயிரமாயிரம்
பகல் முழுதும் பசிக் கொடுமை
வாடி வதங்கும் குழந்தைகள்
அமைதியான இரவுதான் – ஆனாலும்
உறக்கத்திலும் அமைதியில்லை.
மீண்டுமொரு புதிய காலை
ஏக்கபெருமூச்சு அதிகரிக்க
விடியலே நீ ஏன் விடிகின்றாய் – என
ஏங்கும் உள்ளங்கள் ஏராளம்.
துன்பத்தில் தவிக்கின்றான்
வேதனையில் துடிக்கின்றான்
அலைகின்றான் அலைகின்றான்
எங்கெல்லாம் அலைகின்றான்
அகதி எனும் அழகிய பெயருடன்
சுமை தாங்கியாய் திரிகின்றான்
பதறித் திரியும் அநாதைகள்
பார்ப்பார் எடுப்பார் யாருமில்லை
அநியாயமான அடக்குமுறை
உண்மையான அன்புக்கு இடமில்லை
பரவசமான பேச்சுக்கு விலங்கு – இதனால்
வாய்பொத்தி ஊமையாய் ஆகிவிட்டான்
இதுதான் என் விதியோ – என
வாழ்வுக்கு வரம்பிடும் மனிதன்
என்னதான் உலகம்
என்னதான் வாழ்க்கை
முடிவில்லையா என் தேவா
இதற்கோர் விடிவில்லையா – என
அமைதியைத் தேடி ஓடுகின்றான்
மனிதனே சற்று நில் – ஓடாதே
அமைதி உன்னிடமேயுண்டு
அமைதியாக சிந்தித்துப் பார்
உன் உள்ளத்தில் நீயே
அமைதியை உருவாக்கு
மாறட்டும் மனித மனம்
மகிழட்டும் சமுதாயம்
அழியட்டும் அகதி வாழ்வு
மலரட்டும் புதிய வாழ்வு
ஒளிரட்டும் அமைதி வாழ்வு.

**திருமதி.எஸ். டீ. அருமைரூபன். ஆசிரியர்**

## இயேசுவை போற்றுவோம்



இயேசுவை தொழுதிடுவோம்
அருள் எல்லாம் கிடைத்துவிடும்
அன்பினில் வாழ்ந்திடுவோம்
துன்பங்கள் நீங்கி விடும்

செபத்தினை சொல்லிடுவோம்
மன ஆறுதல் கிடைத்து விடும்
பாடல்கள் பாடிடுவோம்
நல்ல இராகங்கள் கிடைத்துவிடும்

துன்பத்திலும் இன்பத்திலும்
இறைவனை தொழுதிடுவோம்
காலையிலும் மாலையிலும்
இறைவனை நாம் தொழுதிடுவோம்

என்றுமே இறைவனையே
மனதினிலே ஏற்றுடுவோம்
நற்கருணை தேவனை நாம்
மகிழ்ச்சியோடு ஏற்றிடுவோம்.

## குழந்தைகளும் ஆசிரியரும்

**சிறுவர்களை என்னிடத்தில் வரவிடுங்கள் ஏனெனில் விண்ணரசு இவர்களதே.**

ஆசிரியர்களாகிய எம்மிடத்தில் வருகின்ற சிறுவர்களைப் பற்றி சற்று சிந்தித்து அவர்கள் பால் எம் கடமை யாது என அறிய முனைவோம்.

புனித லூக்காஸ் தனது நற்செய்தியில் விண்ணரசானது சிறுவர்களது என குறிப்பிடுகிறார். அப்படியாயின் ஆசிரியர்களாகிய நாம் அவர்களை பாதுகாக்க வேண்டும். அவர்களது விண்ணரசிற்குரிய தன்மையை களங்கப்படுத்தக்கூடாது. இவர்களைப் பாதுகாத்தால் மட்டும் போதுமா?

தாலந்து உவமையின் மூலம் கிறிஸ்து எங்களுக்கு கூறியதன் படி இறைவன் கொடுத்தவற்றை வெறுமனே பூட்டி வைத்திராது அதை வளர்த்துக் கொள்ள விருத்தி செய்யவேண்டும் என உணர்த்துகிறார். அப்படியாயின் ஆசிரியர்களாகிய நாம் சிறுவர்களின் இந்த இறைத்தன்மையை விண்ணரசிற்குரிய நிலையில் வளர்க்க வேண்டும். அதாவது உயிரூட்ட வேண்டும். இறையரசின் மதிப்பீடுகளாகிய உண்மை, அன்பு, நேர்மை, விட்டுக்கொடுத்தல், கருணை, பகிர்வு, தாழ்ச்சி, மன்னிப்பு போன்ற எண்ணக்கருக்களை வளர்க்கவேண்டும். விசேடமாக அயலவரை, நண்பர்களை அன்பு செய்ய ஏற்றுக்கொள்ளத் தூண்டுதல் வேண்டும்.

பிள்ளைகளை புனிதத்தன்மையை, இறைத் தன்மையை அடைய வழிகாட்ட வேண்டும். இறைவனை பற்றி சிந்திக்க வேண்டும். செபத்தின் மூலம் பேச அவர் கூறுவதை வேதாகமத்தின் மூலம் கேட்க வழி காட்டவேண்டும். தனக்காக மட்டுமல்ல மற்றவர்களுக்காகவும் விசேடமாக ஒதுக்கப்பட்டவர்களுக்காகவும் இன்றைய உலகில் பெற்றோரை உற்றோரை இழந்து யாரும் இன்றி அல்லல்படும் அநாதைச் சிறுவர்களுக்காகவும் செபிக்க வழிகாட்ட வேண்டும்.

எனவே குழந்தையின் இறையரசிற்குரிய தன்மையை அடைய வழிகாட்டுதல் இலகுவான காரியமல்ல. ஆசிரியர்கள் இச்சவாலை ஏற்க முகம் கொடுக்க தயாராக இருக்கின்றார்களா என்பது ஒரு வினாவாக இருக்கின்றது. ஆசிரியர்கள் இப்பணிக்காக



தங்களை ஆயத்தப்படுத்தவேண்டும். இப்பண்புகளை தங்களுக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும். சிறுவர்களுக்கு முன்மாதிரியாக திகழவேண்டும்.

எனவே ஆசிரியர்களாகிய எம்மிடம் ஒருநாள் இறைவன் எனது குழந்தைகளை உங்களிடம் ஒப்படைத்தேன் நீங்கள் ஆற்றிய பணியாது என்று கேட்கும் போது பதில் கூற ஆயத்தமாக முதலில் நாமும் ஒப்புரவு அருட்சாதனம் மூலம் இறைவனுடன் ஒன்றித்து விண்ணரசிற்குரிய குழந்தைகளை பாதுகாத்து அவர்களுக்கு இறை அன்புக்கான உணவூட்டி விசுவாசத்தில் வளர்த்து புனிதத் தன்மையை அடைய வழிகாட்ட முயலுவோம்.

**திருமதி. பி. குமார்.**

## செபம்



கருணைக் கடலே இறைவா! எமக்கு எவை தேவை என்று நீ அறிவீா அவற்றை எமக்கு நீர் நிறைவாகத் தாரும். அன்பான இயேசுவே நீர் எவ்வாறு பெற்றோருக்கு கீழ்படிந்து நடந்தீரோ அதை போல நாமும் வாழ எமக்கு உதவி செய்யும். அன்பான ஆவியானவரே நீர் எம்மோடு கூடவே இருந்து எம்மை வழி நடத்தி பாதுகாரும்.

ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களை முழு மனிதராக உருவாக்குதல்

நாம் அனைவரும் மாபெரும் 2000ம் ஆண்டு யூபிலியை தரிசிக்கும் வாய்ப்பை பெற்றுள்ளோம். இந்த யூபிலி ஆண்டிலே பல திட்டங்கள் பல கண்டுபிடிப்புக்கள், பல சாகச முயற்சிகள் என்று எமது வெளி உலகுடனான ஈடுபாட்டை சிறப்பித்து மகிழ்கின்றோம்.

இந்தவேளையில் நாம் எமக்குள் இருக்கும் ஆன்மாவை பற்றி சிந்தித்தோமா? அதற்கு யூபிலியாண்டில் என்ன செய்தோம்? என்று கேட்டால் பலரது விடை ஒன்றுமில்லை என்பதாகவே இருக்கும். உடல் மட்டுமல்ல மனிதன். மனிதன் ஆன்மாவையும் ஒருங்கே கொண்டவன். உடலும் ஆன்மாவும் நிறைவடையும் போது அவன் முழு மனிதனாகின்றான்.

ஆம் இன்றைய யூபிலி ஆண்டில் மன்னார் திருச்சபையின் முன்னெடுப்பும் இதுதான். "சிறுவர்களை முழுமனிதராக உருவாக்குதல்" இங்கு சிறுவர்க்ளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அவர்களை இவ்வயது முதலே பூரண மனிதனாக வளர்கக வேண்டும் என எம்மிடம் கேட்கப்படுகின்றது. ஏனென்றால் இன்றைய சிறுவர்கள் தான் நாளைய தலைவர்களாக உருவாக வேண்டியவர்கள். அவர்களை இவ்வயது முதலே மன்சாட்சியுள்ள பண்பாளராக பயிற்றுவிக்க வேண்டும். இந்தப் பருவத்திலே அவர்களை செம்மைப்படுத்த நாம் தவறுவோமாயின் நிச்சயம் நாளைய சந்ததியினரின் தூற்றுதலுக்கு உள்ளாவோம். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

சிறுவர்களே! நாளை நீங்கள் மக்கள் போற்றும் பெரியவர்களாக வர விரும்புகிறீர்களா? இறைவனைத் தேடுங்கள் சகலதும் உங்களைத் தேடும். செபிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். உம் சித்தம் எம்மில்



நிறைவேறுக என்று மன்றாடுங்கள். இறைவனுக்கு உங்களை விட்டுக்கொடுங்கள். கடவுள் உங்கள் தேவையை நிறைவேற்றுவார்.

- பெற்றோருக்கும் பெரியோருக்கும் கீழ்படிந்திருங்கள். அவர்களின் அறிவுரையின் படி செயல்படுங்கள். ஏனெனில் இறைவன் அவர்கள் மூலம் உங்களை வழிப்படுத்துகின்றார்.
- முயற்சியுடையோராய் இருங்கள். நல்லவற்றை தேர்ந்து படியுங்கள். உங்களுடைய நிலை என்ன, விருப்பமான துறை எது என்பதை கண்டுபிடித்து முன்னேறுங்கள். சரியான தெரிவு முயற்சியால் முன்னெடுக்கப்படும் போது தோல்வியடைவதில்லை.
- உங்கள் அயலவரை நண்பர்களை அன்பு செய்யுங்கள். ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். அப்போது உங்கள் துன்ப வேளையிலும் தோள் கொடுக்க ஓர் நண்பன் தயாராய் இருப்பான். கிறிஸ்துவும் இவ்வாறு வாழ்ந்தாரல்லவா?
- மற்றவனுக்கு இடைஞ்சலாய் இருக்காதீர்கள். உங்கள் சுதந்திரத்தைப் போலவே மற்றவனுடைய உரிமைகளையும் மறுக்காதீர்கள். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுங்கள். கடந்து செல்லும் காலம் மீண்டும் கிடைப்பதில்லை.

இவ்வாறான செயல்பாடுகளை உங்களில் வளர்த்துக் கொள்வீர்களேயானால் வீட்டுக்கும் நாட்டுக்கும் நீங்கள் வேண்டப்படும் நல் மக்களாவீர்கள். சமாதானம் உங்களோடு சகவாசமாகி அன்பும் அமைதியும் கொண்டு பூரண மனிதராவீர்கள். இது நிறைவேற ஆசித்து நிற்கின்றேன்.

திருமதி நே. மரியாம்பிள்ளை
ஆசிரியை

# சின்ன பாலகன் இயேசு

சின்னச் சின்னப் பாலகனாம்
என்னை மீட்ட பாலகனாம்
மரியின் வயிற்றில் பிறந்த பாலகனாம்
என் மனதை கவர்ந்த பாலகனாம்

மார்கழி குளிரில் பிறந்த பாலகனாம்
எங்களுடைய பாவத்தை மீட்ட பாலகனாம்
எங்கள் அனைவருடைய அன்பராம்
சின்னச் சின்னப் பாலகனாம் சிறுவர்
எம்மை அழைத்த பாலகனாம்

சிறுவர் எம்மை அழைத்து அன்பு
செய்த பாலகனாம்
எமக்கொரு மீட்பை தந்த பாலகனாம்
பாலனாக எம்நடுவில் ஏழைக்
குடிலில் பிறந்தவராம்

எல். இருதயதாஸ்
ஆண்டு 3

# நாங்கள் நல்ல மாணவர்கள்

நாங்கள் நல்ல மாணவர்கள்
படிப்பு எமது தொழிலாகும்
பள்ளிக்கூடம் சென்று நாம்
படித்தல் எமது கடனாகும்

நேரத்திற்கு செல்வதும்
சிரத்தையுடன் படிப்பதும்
கலைகள் பலதில் தேர்வதும்
எமது கடமை என்றாகும்

துள்ளி விளையாடலும்
அன்பு காட்டி வாழ்வதும்
நல்ல பெயரை எடுப்பதும்
எமது வாழ்வின் குறியாகும்

குருவை போற்றி வாழ்தலும்
மதத்தை மதித்து இருப்பதும்
பெற்றோரைக் கனம் செய்தலும்
மறக்க வொண்ணா வாழ்வாகும்.

பெரியாரைத் துணைக் கொள்வதும்
மரியாதையுடன் நடப்பதும்
பட்டங்கள் பல பெறுவதும்
மாணவர்கள் நம் கடமையே.




பீ.போல் நிஷாந்தன் – ஆண்டு 8 ஏ மன்புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை

# மலரும் மொட்டுக்களைக் கருக விடாது காப்போம்



பள்ளி செல்லும் வயதினில்
துள்ளித்திரியும் பருவத்தில்
கள்ளமில்லாச் சிறுவரை – அவர்கள்
உள்ளமது நோக
உழைத்திட அனுப்புகின்றனரே

பெற்றெடுத்த பிள்ளைகளை – கல்வி
கற்றிடவே அனுப்பாது – சிறாரைப்
பற்றுடனே பேணாது – தம்
வயிற்றினை நிரப்பிடவே
பயிற்றி வருகின்றார் சிலர்

சின்னஞ் சிறு வயதினிலே
அன்னமின்றி தண்ணீரின்றி – குழந்தைகளை
கன்ன மதில் கை வைத்து
அன்னையவள் தந்தையவர்
அன்பினை எண்ணி ஏங்கிடவே
செய்கிறது போர் முழக்கம்

போதைப் பொருட்களை கடத்திடவும்
வன்முறைகள் புரிந்திடவும்
பாதை வகுக்கின்றார் – சில
ஈனத்தனமானவர்கள் – பாலியல்
உபாதைகளும் கொடுக்கின்றனர்

சிறுவரைப் பேணிடுவோம்
வீறுடனே அவர் வாழ்வதற்கே – நல்
வழிகளையே காட்டிடுவோம் – எதிர்கால
சிற்பிகளாய் உருவாக்கிடுவோம் – சிறந்த
தலைவர்களாய் மாற்றிடுவோம்.

ம. அனுறாஜன்
மன்புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை

# வரம் வேண்டும் இறைவா



*ஆசை கொண்டு கற்றிடவும்*
*ஆர்வத்தை காட்டிடவும்*
*அன்பில் நிலைத்திடவும்*
*ஆதவனைப் போல் திகழ்ந்திடவும்*
*எனக்கோர் வரம் வேண்டும்.*

*தாய்க்கு நல்ல பிள்ளையாகவும் - பிறர்*
*அன்பில் நல்ல குழந்தையாகவும்*
*ஏழைக்கு எப்போதும் உதவிடவும்*
*அன்பிற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்திடவும்*
*எனக்கோர் வரம் வேண்டும்.*

*ஒழுக்கத்தை நிலை நாட்டவும்*
*செயலில் அதனை மதித்திடவும்*
*சிறியோரை சிறியோராய் வழிநடத்திடவும்*
*பெரியோரை பெரியோராய் மதித்திடவும்*
*எனக்கோர் வரம் வேண்டும்.*

*நல்லெண்ணங்கள் எமக்கு தோன்றிடவும்*
*பிற எண்ணங்கள் எம்மை விட்டு விலகிடவும்*
*கடவுளை நல் மனதுடன் மதித்திடவும்*
*கண்ணீர் இல்லா வாழ்க்கை வாழ்ந்திடவும்*
*எனக்கோர் வரம் வேண்டும்.*

*எல் வசந்தி - ஊக்குவிப்பாளர்*
*பேசாலை - மன்னார்.*

# எண்ணிப்பார்

நீ வாழும் உலகை எண்ணிப்பார்
நீ செல்லும் பாதையை எண்ணிப்பார்
நீ புரியும் கடமையை எண்ணிப்பார்
நீ செய்யும் நன்மையை எண்ணிப்பார்

உன் வறுமையை எண்ணிப்பார்
உன் வழமையை எண்ணிப்பார்
உன் உறவுகளை எண்ணிப்பார்
உன் உரிமைகளை எண்ணிப்பார்

பாசமில்லா மனிதர்களை எண்ணிப்பார்
பார்வையில்லா மானிடரை எண்ணிப்பார்
பாதைகள் மாற்றிவிட்ட நிலைகளை எண்ணிப்பார்
பாவிகளாய் நடமாடுவதை எண்ணிப்பார்.



டி.ஜோன்ஜெனிபட்
ஆண்டு 7 சி
மன்புனித சவேரியார்
ஆண்கள் தேசிய
பாடசாலை

# இன்றைய உலகம்

பசுமை நிறைந்து வாழ்வு செழித்து
வளத்தோடு வளமாக உயர்ந்து
ஒற்றுமையோடு வேற்றுமையின்றி
திகழ்ந்த உலகம் அன்றைய உலகம்

ஆயுதங்களோடும் கட்டைகளோடும்
இரத்தமோடும் வீதியோடும்
விதியை நினையா ஓடும் இளைஞர்களை
அறிந்தும் அறியா இன்றைய உலகம்

துண்டோடும் துணியோடும்
பட்டினியால் வாடும்
குடும்பமாகவும் கூட்டமாகவும்
வீதிதோறும் தார் ரோட்டுதோறும்
வாழ வழியின்றிய இன்றைய உலகம்

சாதிப் பிரச்சனை சமயப் பிரச்சனை
குல பேதப் பிரச்சனை
கத்திகளால் கை கால்களை வெட்டி
ரோட்டில் அலையும் இனப்பிரச்சனை
இதைத் தீர்க்க முடியாத இன்றைய உலகம்

நம் நாடு நம் நேசம் என்றுரைத்து
ஒன்றுபட்டு வாழ்ந்து வந்த நாட்டோடு
போர் புரிந்து அதையுடைத்த பிறநாடு
மண்ணோடு மண்ணாக அழிந்தும்
இதை அடக்கி வாழும் இன்றைய உலகம்.

புகையாயும் தூசாயும் விஷ வாயுவாயும்
அழிக்கும் நாம் சுவாசிக்கும் காற்றை
துண்டாடப்பட்ட நிலம் தோறும்
பிறர் வாழ எம் வாழ்வு மரத்தடியில்
என்றும் மாறா இன்றைய உலகம்.

சி.சிறீதரன்
கோவில்குளம்
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகள் ஒரு பார்வை

| | |
|---|---|
| காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் | அறுவடைக் காலத்தில் சேகரித்து வைக்கும் மகன் ஞானமுள்ளவன் (பழ. 10:5) |
| அகத்தின் அழகு முகத்தில் தெரியும் | செல்வன் ஒரு சமயம் வறியவன் போல் இருக்கின்றான் (பழ 13:7) |
| ஆனைக்கும் அடி சறுக்கும் | தன்செல்வத்தைப் பெருக்கும்படி ஏழையை வஞ்சிப்பவன் தன் சொத்துக்களை கொடுத்து விட்டு பிச்சையும் எடுப்பான். (பழ. 22:16) |
| தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும் | குழியைத் தோண்டுகிறவன் தானே அதில் விழுவான். கல்லைப் புரட்டுகிறவனிடமே அது திரும்பி வரும். (பழ 26:27) |
| அடிக்கிற கைதான் அணைக்கும் | உள்ளாங்க நேசத்தைவிட வெளியரங்க கண்டனமே அதிக நல்லது. |
| பொய்யும் புரட்டும் சிரட்டையும் கையும் | நேர்மையானவற்றைப் பேசுகிறவன் நேசிக்கப்படுவான். |

திருமதி பி. குமார்.

## வேதாகமத்திலிருந்து அன்பு

1. அவர்கள் உங்கள்மேல் அன்புகூர்ந்து உங்களைப் பாரவோனின் அடிமைத்தலையினின்றும் விடுவித்தார். (இ.ச.7:6–8)
2. பிறரிடத்தில் அன்பு கூர்பவன் திருச்சட்டத்தை நிறைவேற்றுபவன் ஆகிறான். (உரோ.13:6:10)
3. பெற்றதாய்க்கு அன்பு வற்றிப்போகுமோ அப்படியே பெற்றவள் தன் பிள்ளையை மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை. (இசை.49–18)
4. கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருங்கி ஏவுகிறது (5–14)
5. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமை இல்லை, அன்புத் தன்னைப் புகழாது. இறுமாப்பாயிராது, அன்பு ஒருபோதும் அழியாது. அன்பை நாடுங்கள். (கொரி 13)
6. கடவுளிடம் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது. (உரோ. 7:38)
7. என் கட்டளைகளை ஏற்று கடைப்பிடிப்பவனே எனக்கு அன்பு காட்டுகின்றவன் மேல் என் தந்தையும் அன்பு கூர்வார். (அரு. 14:21:22)
8. நீ உனக்கு அன்பு செய்வது போல் உனது அயலானுக்கும் அன்பு செய். (லேவி 19:18)
9. நீங்கள் ஒருவருக்கு ஒருவர் அன்பு செய்யுங்கள். நான் உங்களுக்கு அன்பு செய்தது போல நீங்களும் ஒருவருக்கு ஒருவர் அன்பு செய்யுங்கள். அப்போதுதான் நீங்களும் என் சீடர் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வார்கள். (அரு.13:34–35)
10. உன் தேவனாகிய கடவுளிடம் உன் முழு இதயத்துடனும், முழு ஆன்மாவோடும் சிரத்தையுடனும் அன்பு கூர்வது போல உன் அயலானுடனும் அன்பு கூர். (லூக் 10:27)
11. உலகிலிருந்த தம்மவர் மேல் அன்பு கூர்ந்த இயேசு இறுதிவரை அவர்கள் மேல் அன்பு கூரலானார். (அரு.13:1)
12. உங்கள் பகைவர்களையும் சிநேகியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். (மத்.5:44)
13. கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார். குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவரன்பின் மூலம் இணைந்து உயிர்பெறச் செய்தார். (எபே. 2:4–5)
14. அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக! இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து கிறிஸ்துவுடைய அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று உணர்ந்து அறிவுக்குஎட்டாத இந்த அன்பை அறிந்துகொள்ளும் ஆற்றல் பெறுவீர்கள். (எபே 3:17–19)
15. தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை. (அரு.15:13)

செல்வி. சியாமா கிறிஸ்தோபர்

## புது வருடமும் என் மனமும்

புத்தாண்டு புது வருடத்தில்
புலருமோ நிலையான சமாதானம்?
எக்காலமோ எழுந்த யுத்தம்
சுருக்காகுமோ இவ்வருடம்.

உடமை இழந்து உறவுகள் பிரிந்து
நால் திசையில் வாழும் நண்பர்கள் சகோதரர்கள்
சிந்திய கண்ணீர் துளிகள் மாறுமோ இவ் வருடம்
புது வருட பாதையில் பாதம் பதியுமோ.....
அல்லது சமாதான பயணம் முடியுமோ....
என எண்ணித் துடிக்கிறது என் மனது

புதுவருடம் புலர்ந்ததும் சமாதானமும் பிறந்து விட வேண்டும்
என புண்ணியவனிடம் கண்ணியமாக கரம் ஏந்தி மன்றாடுகிறேன்.

ய. நெல்சன் றோய்
அளவக்கை.

## எம் சிந்தனைக்கு



- எம் வாழ்வில் எல்லாவிதமான சோதனைகள் வரும்போதும் நாம் எப்படி செயல்படுகின்றோம் என்று சிந்தித்துப்பார்ப்போம்.
- எம் வாழ்க்கையில் பல இடையூறுகள் தோன்றும் போது விசுவாசத்தில் கெட்டியாக இருக்கின்றோமா அல்லது எம் மனம் வேறு சக்திகளில் அலை மோதி ஓடுகின்றதா.
- எம்மை அன்போடு வழிநடத்தும் தந்தையிடம் அல்லது எம்மை காக்கும் தாயிடம் கடுகளவு விசுவாசமேனும் உண்டா
- எனது கண்கள் மற்றவர்கள் படும் துன்பத்தை பார்க்கின்றனவா. எனது காதுகள் என் சகோதரனின் அழுகுரலைக் கேட்கின்றனவா. அல்லது இவை எல்லாவற்றையும் மறந்து தன்னலம் என்னும் கூட்டுக்குள் வாழ்கின்றேனா.
- என் வாழ்க்கையில் உவமையில் வரும் மூத்த சகோதரன் போல் செயல்படுகிறேனா அல்லது இளைய சகோதரன் போல் என்னை கருத முடியுமா?
- எமது இளமையில் எத்தனையோ விதமான சந்தோசங்கள் அனுபவிக்கின்றோம். பிறருக்காக ஒரு நாளாவது வாழ்வதுண்டா.
- எம்மைப் படைத்த இறைவன் ஏன் இவ்வளவு இளமையில் மரிக்க வேண்டும் அவர் எப்படி மரணத்தை தாங்கினார் என்று சிந்தித்ததுண்டா.

## மனுவேசம்

மாடடைக்குளிரில் மார்கழிப்பனியில்
சிலிர்த்திட்ட மலராய் சின்னவன் இயேசு
பாலகனாய் மண்ணிலே விண்ணரசி
மடியிலே மண்ணுயிர்கள் மகிழ்ந்திட
மங்களங்கள் இசைத்திட பூண்டாரே!
மனுவேசம் ஆனால் மனிதனோ
போடுகின்றான் பல வேஷம்

பாவங்கள் போக்கிட பல உயிர்கள் மீட்டிட
பாரிற்கு பாதையாய் தீட்டினாய் நீ மீட்புத்திட்டம்
மனிதனோ போடுகின்றான் உலகிற்கு அழிவுத்திட்டம்
அன்புரு கொண்டு அவனியில் அவதரித்த அர்ப்பணனே
உம் ஞானம் என்று சொல்லி அகிலமதை
அலைக்கழிக்கும் அஞ்ஞான வேசங்கள் தான் எத்தனை?

வெள்ளாடை கட்டிக்கொண்டு கோயிலில்
கும்பிடும் எம் தேசம் வீதிக்கு வந்துவிட்டால்
அயலானை வதைப்பதுதான் பிரதான நோக்கம்
ஒப்பிட்டு பார்த்தால் பரவாய் இல்லை
அன்றைய ஏரோதின் தேசம் ரயர்
போட்டு கொளுத்துவதும் உயிரோடு
புதைப்பதும்தான் எம் தேசத்தின் அயராத நோக்கம்

சின்னவனே சித்திரமே செங்கதிராய்
வந்துதித்த எம் தத்துவமே! செல்லாதோ!
என் மனங்களின் கோஷம் அகலாதோ!
எம் அகதிவாழ் தேசம் – கனியாதோ!
கல்லான மனங்களின் பாசம் மீளாதோ!
எம் வாழ்வின் கண்ணீர் தேசம் உன் வரவால்
மலராதோ! ஒரு புன்னகைத் தேசம்.

பாலகனே உன் வரவால் விண் பனிமழை
தூவிடவே! அஞ்சாதே! அமைதி
என்றனரே வானவர்கள் அன்று
அண்ணார்ந்து பார்த்தால் வானூர்திகள்
குண்டு மழையல்லோ பொழிகின்றனர் இன்று.

அன்பனே! இயேசுபாலா எம் துன்பந்தனை
துடைத்திடாயோ பாவப்பட்ட பாருலகை
மீட்க பாலகா! நீயும் பலிக்கடா ஆனாயோ!
உன் வரவை எதிர்பார்த்து பாருலகு
துப்பாக்கி ரவைகளுடன் போருலகாய் நிற்குதைய்யா
பல உயிர்கள் பலியாகியும் விடியல் மட்டும்
விரையில் இல்லையையா.

புத்துயிர் ஈராயிரம் புதுயுகமாய் புலர்ந்திடாதோ!
ஆசைகள், சிறைச்சாலைகள் தகர்த்திட
நீயும் பிறவாயோ! அகந்தைகள்
அதிகாரங்கள் அழிந்திட நீயும் வாராயோ!
வஞ்சனை உலகின் வன்முறை நீயும் ஒழிப்பாயோ!
செந்நீர் சிந்தும் எம் வேதனைக்கீதம்
கேட்காயோ! எம் இதய தொட்டிலில்
யாழிசை மீட்டிட நீயும் வாராயோ!

ஆதவனே உன் வரவால் அகிலமதில்
அகல் விளக்கை ஏற்றாயோ!
பிரிந்து போன உன் திருச்சபையை
ஓர் உடலாய் நீயும் மாற்றாயோ!
மகிழ்வு என்னும் மலர்தூவி மனிதங்களின்
மனமதனை நிரப்பாயோ! பிளவுபட்ட
எம் இதயங்களை ஓர் இலங்கை
தேசமாய் நீ மாற்றாயோ!

ரீனா கல்யாணி ஆர்பீ
வங்காலை – 6 – மன்னார்.

### மன்னா பற்றிய உங்களுடைய கருத்துக்கள்

மன்னா பற்றிய உங்களுடைய எண்ணங்களை, கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். ஆக்கங்கள், பங்குச்செய்திகள் அனைத்தையும் அனுப்பலாம்.
தொடர்புகளுக்கு

மன்னா
அன்பியத் தொடர்பகம்
புனித வளன் திருமறைப்பணி நிலையம்
மன்னார்.
தொலைபேசி இலக்கம்: 023–32377

மன்னா உங்கள் பத்திரிகை, அதன் வளர்ச்சியும் தளர்ச்சியும் உங்கள் கரங்களில்.

[illegible] 50/19 [illegible] – 13 [illegible]

யூபிலி
கி.பி 2000

அன்பியமே நமது வழி [illegible] சபை வாழ்க்கைதனை வாழுவோம் வாழுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org